Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2621

9

# செங்கதிர்



-/75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழில் சங்கதி இதுதான்

# SENGKATHIR

"அறிவு என்னும்
ஆதவன்
சிந்தும் ஒளிர்வே
செங்கதிராகும்"

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 2621


அஞ்சல் மூலம் அஞ்சலி — 3
எம்முறை – நோக்கத்தின் ஏக்கம் — 5
விண்ணில் தவழும் விண்மீன்கள் — 9
அதிக நிறை ஆரோக்கியத்திற்குக் கெடுதலா
சி. மாணிக்கவாசகர் — 13
சிந்தனையைக் கிளற சற்றே சிரிக்க — 16
செய்திக் கதிர் — 17
செயற்கை உரம் ( மாமாவரம் எஸ். மாணிக்கம் ) — 20
( புதிர்க் கதிர் ) வரவேற்பும். நிபந்தனையும் — 24
விடியும் நாளை ( அட்டைப் படம் ) — 26
முகத்தைச் சிதைக்கும் முகப்பரு – மென் கதிர் — 29
பேட்டியிலும் போட்டி ,, — 37
ஏக்கம் வேண்டாம் உண்மைதான் - ஏடுருவி — 41
நெஞ்சில் நிறைந்த நினைவுகள் — 43
கேள்வி பதில் — பவிதன் — 53
Decision - Gary Bousman — 56
Mail Bag — 60


AN EDUCATIONAL MAGAZINE
PUBLISHED IN TAMIL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SENGKATHIR


Executive Editor : **Ponna Kumarasuriyar**

Associate Editor : K. T. Indralingam

Art Work : **N. T. Moorthy** ( *New Wave* )
**K. K. V.**

Proprietors & Publishers : **Sunzsons Tuition Service**
P. O. Box 47
Jaffna, Sri Lanka

Production : **Vivekananda Press**
Vivekananda Building
Jaffna

Registered Office : No. 60, Punkankulam Road
West Colombuthurai
Jaffna, Sri Lanka


---

## சந்தா விபரம்

( தபால் மூலம் )

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | சதம் | 75 |
| 6 மாதம் | ரூபா | 5-00 |
| 1 வருடம் | ,, | 9-00 |
| 2 வருடங்கள் | ,, | 16-00 |


---

## Foreign Subscription Rates

12 Issues by Air Mail

| | |
|---|---|
| Malaya & Singapore | S $ 5 |
| U. S. A. & Canada | U S $ 2 |
| U. K. | Sterling £ 1 |
| Other Countries ( Excluding-India ) | U S $ 2 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஞ்சல் மூலம் அஞ்சலி

51 தங்கள் செங்கதிர் சிறந்தோங்க நான் பெரிதும் முயற்சிக்கின்றேன். தயவுசெய்து புத்தகமொன்றை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஏறாவூர், செங்கலடி, நா. தவராசா

52 மஸ்கேலியா புத்தகக்கடைக்கு செங்கதிர் இன்னும் வந்து சேரவில்லை. தினமும் விசாரித்து ஏமாற்றமடைகின்றோம். சிலவேளை புத்தகக்கடைக்காரர் மேற்படி பத்திரிகை விற்பதை நிறுத்தி விட்டாரோ என்னவோ உண்மை தெரியவில்லை ஆகையால் இத்துடன் விலாசம் எழுதிய தபாலட்டை வைத்துள்ளேன். அண்மையில் வெளியான இதழ்களைப் பெற்றுக்கொள்ளும் முறையை அறிவிப்பீர்களானால் நன்றியுடன் ஏற்று ஆவன செய்து கொள்வேன்.

மஸ்கேலியா, ஏ. எம். சூசை

53 செங்கதிர் இதழ் வாசித்து ரசித்தவர்களில் நானும் ஒருவன் ஆரம்பத்திலேயே செங்கதிர் உயர்ந்த மாத ஏடுகளின் தரத்தை அடைந்துவிட்டது. ஒவ்வொரு பகுதியும் அப்பகுதிகளில் ஆர்வமும் அக்கறையுமுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளவர்க்களுக்கு ஏற்றதாயும் கருத்துக்ககள் செறிந் தவைகளாயுள்ளன. கருங்கக்கூறின் தரமான மாத ஏடில்லாக் குறையை நீக்கிவிட்டீர்கள்.

நியாயதுரந்தரர்
யாழ்ப்பாணம் ப. மயில்வாகனம்

54 செங்கதிர் விநியோகம் பற்றி குறைப்படுகின்றோம் விநியோக முறையைச் சீர்படுத்தாமல் வாசகரைக் குறை கூறுவது சரியல்ல. கொழும்புக் கடைகளில் நம் செங்கதிரைக் காணவில்லையே......? கருத்தில் கொள்கிறீர்களா?

யாழ்ப்பாணம் "கொழும்பான்"
(ஆவன செய்கின்றோம் – ஆர்)

56 செங்கதிர் இதழ் எனக்கும் பார்க்கக் கிடைத்தது செங்கதிரைப்பற்றி நான் மிகமகிழ்ச்சியடைகின் றேன்.

மாணிக்கலத்தை
உடப்புசல்லாவை M. செங்கதிர்ச் செல்வன்

57 ஈழமாதாவின் விஞ்ஞானப் பெட்டகம் கலங்கரை விளக்கம் செங்கதிராகும்.

சுழிபுரம் மு. விசாகதாளினி

## புதிர்க்கதிர் (போட்டிப் படிவம்) 9

பெயர் ..............................

விலாசம் : ..............................

வயது : ..............................

போட்டியின் பெயர் : ..............................

..............................
கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முரை

# நோக்கத்தின் ஏக்கம்

## கட்டம்

ஈழத்தில் தமிழ்ச் சஞ்சிகைகள் உருவாக வேண்டும் வெளிவர வேண்டும், என்று பலரும் பத்து விதமாகப் பேசினர். அவர்களுள் அவர்களுள் எழுத்தாளர் மட்டுமல்ல, அறிஞர்கள், பொருளாதார நிபுணர்கள், நாட்டு நலம் நாடும் பெருமக்கள், பொதுநல விரும்பிகள் அரசியல் வாதிகள் மற்றும் மந்திரிகள் கூட இடித்துரைத்தார்கள். ஊக்கம் கொடுப்பதாக பெருமை பேசினார்கள்! ஆனால் நடப்பதென்ன இந்த நோக்கம் நிறை வேற மேற் கூறிய ஒருவரிடத்தில் தன்னும் இக் கட்டத்தில் முறையான முழுமையான ஒரு நல்ல திட்ட முண்டா என்று ஏக்கம்.

## திட்டம்

திட்டமில்லாவிட்டால் என்ன மக்களிடையே விருப்பம் காணப் படுகின்றதே அது ஒன்றே போதுமே எனச் சிலர் சஞ்சிகைகளை உரு வாக்க முனைந்தார்கள். ஆமாம, உருவானதும் அதற்கு வழி தானாக வரக்கூடும் என்றெண்ணத்துடன் ஆவலுடன் அதாவது பிள்ளை சுக மாகப் பெற்றுவிட்டால் அப்படியோ இப்படியோ அதனைப் பேணி வளர்க்க முற்படும் தாய் தந்தையர் ஏக்கம் போல் அவர்களது நிலை

## நாட்டம்

இப்படி ஏங்கித் தவித்து ஏதாவது உருவாக்கி நல்லது செய்து முனைத்து வரும் சில நல்ல சஞ்சிகைகள் சில படும் அல்லல்களை பலரும் பத்து விதமாகக் கூறிவருவதும் தெரிந்ததே அவற்றுள் முக்கிய மானவை பல — வாசகர் நாட்டம் — அதாவது ஈழத்தின் பத்திரிகை களின் தரம் நம் நாட்டு வாசகருக்கு "உருசி" யாக இல்லையாம் ஆகவே ஈழம் முழுவதும் தரமான பத்திரிகைகளுக்குக் விற்பனை யில்லையாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் குன்றிய பத்திரிகைகள் மனிதனை இன்பத்துக்குள் சில நிமிட நேரம் அமுக்கிப் பின் அவன் ஈரலையே சப்பித்துவிடும் மதுபோல் இன்றைய மக்களை வசப்படுத்தி வருவதனால் அதன் விளைவு என்னவாகும் என்று தரமான பத்திரிகை படைப்பவர் மட்டுமல்ல வளமாக வாழ வேண்டும் என்ற கொள்கையுடையோரினதும் ஏக்கம் ஆகும்

## திண்டாட்டம்

போனால் போகட்டும் போப்பா என்று உறுதியாக ஆனால் உள்ளுணர்வாக உருப்படுத்தப்படும், உயிர் வாழும் சில சஞ்சிகைகள் படும் திண்டாட்டம் "தரிக்கிணதோம்" "தில்லானா" போன்ற தாளத்துக் கொம்பாகலாம். இதோ சில தொடர்புகள் — ஏக்கம் பலவகை

*எழுத்தாளன் ஏக்கம் :* எழுதுகிறோமே — படைப்புக்கும் பணம் தந்தால் உதவியாகுமே எமக்கும் உழைப்பாகுமே?

*தயாரிப்பாளர் ஏக்கம்:* பாவம் தான் — நியாயம் தான் பணங்கொடுத்து படைக்கும் பொருள்களை வாங்குவார்களா தம் வாசகர்? விற்பனை போனால் நமக்கென்ன உதவுவோமே — கட்டுபடியாகுமோ ?

*வாசகர் ஏக்கம்:* வாசிக்கப் பணங் கொடுத்து வாங்கிறோமே ஏதோ நூல் வடிவமாக்கி அனுப்புகிறார்களே சத்தில்லையே! உருசி இல்லையே! பக்கம் போதாதே! கவர்ச்சியில்லையே! வெளி நாட்டுப் பத்திரிகைகளில் இவ்விலைக்கு... எவ்வளவு படைப்பு தயாரிப்பாளர்கள் கவனஞ் செலுத்துவார்களா?

*பார்ப்பவர் ஏக்கம்:* எவ்வளவு காசைக் கொட்டுகிறார்கள்! சஞ்சிகையாளர் நம்மக்கள் ஆதரவளிப்பார்களா?

*பக்கத்தில் நின்றவர் ஏக்கம்:* உணர்ச்சியுடன் பேசுகிறாரே இவராவது ஒரு சந்தாவை அனுப்பிவைப்பாரோ?

*பிரசுரிப்பாளர் ஏக்கம்:* ஐயையோ, இந்த கஷ்ட காலத்தில், விற்பனை குறைவானால் பிரசுரிப்பது மடமை — பத்திரிகைக்குத் தட்டுப்பாடு கறுப்புச் சந்தை நாடு பூரா காசுக்கும் நல்ல தாள்கள் கிடைக்கா சரி சரி விளம்பரங்களின் உதவியுடன் ஓடிப்பார்போமே.

*விளம்பரதாரர் ஏக்கம்:* எல்லாம் அரசாங்கம் நடாத்துதே நமக்கு குவோட்டா "கட்" ஆகிவிட்டதே எதனை விளம்பரப்படுத்துவது உங்களுக்காக விளம்பரம் தாறோம். "ராக்ஸ்" அடிப்பானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாளர் ஏக்கம்: என்ன எங்களைத் திட்டுகிறீர்கள். நாலுதரம் அடித்ததும் ரைப்மடங்குதே ஓடையுதே "மெசின்" ரெடியாக்கி அடிக்கத் தொடங்க மை காயுதே கலர் வடிவாக அடி நாம் சொன்ன கலர் போடு என்றால் நமக்குச் சந்தையில் அகப்படுவதைத் தானே சமாளிக்கணும். எல்லாம் தட்டுப்பாடு சிக்கிரம் நாமும் கதவடைக்க வேண்டுமே நேரத்துக்கு அடி என்றால் வேலையாட்கள் இந்த காலத்தில் அந்தக் காலத்தைப் போலவா ?

அரசியல் வாதி ஏக்கம்: இந்தக்காலத்திலே ஒருவாறு அரசின் ஆதரவுடன் சில சிலவற்றைச் சாதிக்கலாம். கவுண்மெண்ட் அற்வெடிஸ்மெண்ற் கிடைக்கும். இதை விட்டு ஏன் கஷ்டப்படுவான்.

பிரமுகர் ஏக்கம்: அரசுக்காதரவாக படைத்தாப்போல் நாமென்ன வாங்கிப் போடுவமா ? என்ன — நமக்கு வேண்டியது 'சப்ஜெக்ட்'

பொருளாதார நிபுணர் ஏக்கம்: தரமான சஞ்சிகையானாலும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக வராதபட்சத்தில் அது நாட்டிற்குதவாது அதாவது பிரசுரிப்பாளருக்குமுதவாது. பொருளாதாரத்தைப் பெருக்க அமையவேண்டும்.

கணக்காளர் ஏக்கம்: எல்லாத்தையும் பார்த்துவிட்டு இந்த மனிசன் இப்படிப் பேசுதே. இவனுக்கே எப்படிப் பொருளாதாரத்தை சஞ்சிகை மூலம் பெறலாம் என்பது தெரியுமோ என்னவோ ?

பொதுநல விரும்பியின் ஏக்கம்: பெரிய சேவை பெரிய சேவை கஷ்டத்துக்குள்ளும் நஷ்டத்துக்குள்ளும் இப்படி நம் சஞ்சிகைகள் நடாத்தப்பட வேண்டும். சனசமூக நிலையகாரருக்கு கட்டாயமாக "சும்மா" ஓரிதழ் அனுப்பி வையுங்கோ. இது தொடர்ந்து வெளிவருமா ?

அறிஞர் ஏக்கம்: "ஏட்டுத் தொழில் மோட்டுத் தொழில்" இதை விட்டு வேறு ஏதாவது செய்தால் நன்றாயிருக்கும் வேறு எதனைத்தான் இலங்கையில் செய்யச் சொல்லலாம் — மாற்றுக்கு என்ன சொல்லலாம்.

ஓராசிரியர் ஏக்கம்: இப்படி இழுபறிப்பட்டுப் பிரயோசனமில்லை. வேலையும் "இன்ரறிஸ்டிங் ஆக இருக்காது. வகையை மாற்றுவோமா ?

உருவாக்கியவன் ஏக்கம்: இவ்வளவு கர்லமும் ஓடிவிட்டு இப்ப நாம் இதனை விட்டு விட்டு ஓடுவதா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டம்

இவ்வளவு பேரையும் சமாளித்து இன்று முக்கியமாகத் தமிழ் சஞ்சிகைகள் மூக்கைப் பிடித்தபடி முனைத்துக்கொண்டிருக்கின்றன. பெரும் பெரும் போராட்டங்களிலும் வெற்றி பெற்றாலும் ஒரு சஞ்சிகை உருவாக்கி வடிவாக்கி வருவதில் வரும் திட்டத்தைச் சமாளித்தும் உண்மையான தொண்டர் இலகுதவியுடன் போராடிக் காணும் வெற்றிக்கு ஈடு இணையாகாது. எனப் பிரசுரிப்பாளர் பெருமை பேசி இன்னும் எத்தனைவைச் சாமாளிக்கவேண்டுமோ என்று ஏங்குகிறார்.

## சட்டம்

இப்போராட்டத்திற்குள் வெற்றி காணுவதற்குள் சட்டங்களைச் சமாளிக்கணுமே. அதனையும் ஒழுங்காக கவனிக்கணும். உரிமையாளர் ஏங்குகிறார். அல்லாட்டால் அது வேறுகஷ்டம்.

## உருவாக்கம்

இவைகளையெல்லாம் கருத்தில் கொண்ட நீங்கள் சஞ்சிகையை உருவாக்கின்றீர்கள் அப்பாடா இது ஒரு பிரமாண்டமான வேலை. " ஹேர்கூலியன் ராஸ்க " இது உங்களுக்கு அலுப்பு வெறுப்பாவதில்லையா ?

## நோட்டம்

இவற்றையெல்லாம் தெரிந்தபின் வாசகர், மற்றும் பிரமுகர்கள் நோக்கத்தையும் ஏக்கத்தையும் எவ்வாறு வெளிப்படுத்துகின்றீர்கள் என்று சஞ்சிகையாளர் நோட்டம் விட்டு இனியாவது நிலைமை திருந்துமா ? என ஏங்குகிறார்கள்.

வாழ்க்கை ஒரு புதிர்
அதன் திறவுகோல் கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் தவழும்

## விண் மீன்கள்

விண்மீன்களை நாளாந்தம் காணும்போது நம் சிந்தனை அதன் கடந்த காலம் வரை இழுத்துச் செல்கிறது. அவற்றிலிருந்து பெறப்படும் வெளிச்சங்கள், காலம் உலகில் தோன்றுவதற்கு முன்பேயே தம் பிரயாணத்தை ஆரம்பித்து உள்ளது. சேய்மையிலுள்ள நட்சத்திரங்களின் வெளிச்சம் மனிதன் உலகில் தோன்று முன்னமே தம் பிரயாணத்தை ஆரம்பித்து இருக்க வேண்டும்.

சூரியனின் ஒளி 93 மில்லியன் மைலுக்கு அப்பால் இருந்து பூமியை வந்து அடைய 8 நிமிடங்கள் செல்லும். பூமிக்கு மிக அண்மையில் உள்ள Proxima-Centauri இல் இருந்து வரும் ஒளி பூமியை வந்து அடைய நாலு வருடத்துக்கு மேல் செல்லும். அதாவது ஒரு செக்கனுக்கு 186300 மைல் வீதம் 6 மில்லியன், மில்லியன் மைல்களை ஊடுருவி நம்மிடம் வந்து சேர இத்தனை காலம் எடுக்கின்றது, அதாவது பூமிக்கும் இந்த நட்சத்திரத்திற்கும் இடைப்பட்ட தூரம் 26 மில்லியன் மில்லியன் மைல்களாகும்.

விண்வெளியில் உள்ள படைப்புகளின் இடைத்தூரங்கள் மிக அதிகமாதலால் மைல் கணக்கில் இவற்றை அளக்க முடியாது. வானியல் ஆராய்ச்சி நிபுணர்கள் இதனால் 1 வருடத்தில் ஒளியின் வேகத்தை அடிப்படையில் கொண்ட ஒளிவருடம் (Light year) என்ற கணிப்பைக் கையாளுகின்றனர். அவற்றின் இந்தக் கணிப்பின் அடிப்படையில் புறொக்சிமா சென்ரோறி (Proxima Centauri) அல்ரெயர் (Altair) 4⅓ Light year க்கு அப்பால் உள்ளது. Vega என்ற நட்சத்திரம் 26 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளது. டெனிப் (Deneb) 1500 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளது. இப்பால் வழியில் (Milky-Way) சில நட்சத்திரங்கள் மிக தொலைவில் இருப்பதால் அதன் ஒளி எம்மை அடைய பல ஆயிரம் வருடங்கள் செல்லும்.

நட்சத்திரங்கள் அதன் அளவிலும் ஒன்றுக்கொன்று பெருமளவு வேறுபடுகின்றன. சூரியன் எமக்குப் பெரிதாக பூமியிலும் பலமடங்கு பெரிதாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஒரு சராசரி நட்சத்திரத்தின் அளவையே கொண்டுள்ளது; சில நட்சத்திரங்கள் (Super giant) இராட்சத உருவம் கொண்டவை. நட்சத்திரங்களுடன் சூரியனை ஒப்பிடுமிடத்து மிக நுண்ணியதாகத் தோன்றும் உதாரணமாக Betelgeuk என்ற நட்சத்திரம் முழு ஞாயிற்றுக் குடும்பத்தையும் அடக்குவதுடன் 284 மில்லியன் மைல் விட்டம் கொண்ட செவ்வகத்தையும் உள்ளடக்கும்,

நட்சத்திரங்களின் உண்மை பிரகாசத்திலும் வேறுபடுகின்றது. இதனால் இவற்றை Magnitude என்ற கணிப்புகளாகக் கணித்து 1-ம் 2-ம் 3-ம், முக்கியமானவையாகக் கொண்டன. இதனில் மிகப் பிரகாசமான படம் ★ ✳ ★ 1 st Magnitude என்றும் வேறு மிகப் பிரகாசமான நட்சத்திரங்களுள் 2 nd Magnitude என்றும் சற்றே குறைந்த பிரகாசம் கொண்ட நட்சத்திரங்கள் என்று சொல்லலாம். 6 th Magnitude வரை செல்லும் இவற்றை வெற்றுக் கண்களுக்கூடாக மிகத் தெளிவாக இரவில் தெரியும் பிரகாசம் குறைந்த நட்சத்திரங்களைக் குறிப்பதாக அமையும் 1st Magnitude க்கும் இடையில் பிரகாசத்தில் வேறுபாடு 100 மடங்காக இருக்கும்.

இதன் மிகப் பிரகாசமான நட்சத்திரங்களான Rigel, Regulas என்பன இரண்டும் பூமிக்கு மிக அண்மையில் அமைந்துள்ளன அல்ல. பல பிரகாசம் குறைந்த நட்சத்திரங்களுள் பூமிக்கு அண்மித்தும் சில பிரகாசம் கூடிய நட்சத்திரங்கள் மிகத் தூரத்திலும் காணப்படுகின்றது. Alpha Centauri என்ற ஒரு பகுதியில் காணப்படும் நட்சத்திரங்களும் Altair என வடக்கில் காணப்படும் நட்சத்திரமும் ஓரளவுக்கு எமக்கு அண்மித்துக் காணப்படும்,

ஆதிகாலத்தில் இருந்தே நட்சத்திரக் கூட்டங்கள் பலவற்றையும் மக்கள் மிருகங்களின் பெயர்கள் பல விடுகதைகளின் தலையங்களின் பெயர்கள் முதலியவற்றால் வழங்கி வந்துள்ளன, இவற்றில் சில Orion Corona Boulalis என்ற நட்சத்திரங்கள் சிக்னஸ் Cygnus (The Swans) என்ற 5 நட்சத்திரக்கூட்டத்தில் சிலுவை வடிவம் கொண்டதாகவும் (Ursa Major Great Bear) என்பது ஏர் கலப்பை உருவத்தில் அமைந்தவையாதலால் இவற்றைச் சார்ந்து வழங்கப்பட்டது.

பூமியானது தனது அச்சில் சுழலுவதால் நட்சத்திரங்கள் சூரியனைப் போன்று வானத்திற்குக் குறுக்காக கிழக்கில் இருந்து மேற்காகச் செல்லும். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட துருவத்தில் உள்ள போலரிஸ் (Polaris) என்ற நட்சத்திரம் மட்டும் மேற்காக உள்ளதால் அசையாமல் நிற்கும். இது வடதிசையைக் காட்டுவது மட்டுமன்றி அதன் வடக்கில் உள்ள கோண உயரம் அகலக் கோட்டிற்கு நேராகவும் இருக்கும். லண்டன் நகரத்தின் அகலக்கோடு 51½ பா. வடக்கில் இருக்கும் போது துருவ வட்டத்தில் 51½ பாகையில் இருக்கும்.

வடதுருவத்தில் காணப்படும் Polaris போன்ற பிரகாசமான நட்சத்திரத்தைத் தென் துருவத்தில் காண் இதனால் தென் துருவத்தில் நிதானமாக காட்ட முடியாது. தென் துருவத்தில் மத்தியைக் காண தெற்கு Cross இல் இருந்து மிகப் பிரகாசமான Achernar நட்சத்திரத்துக்கு ஒரு கோட்டை வரைய தென்துருவ மையம் இக் கோட்டின் மையத்தில் சிறிது வலப்பக்கத்தில் காணப்படும்.

நாம் வெற்றுக் கண்ணால் பார்க்கும் பொழுது 2000–2500 நட்சத்திரங்கள் வரை தெளிவாக ஓர் இரவில் காண முடியும். ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி (Binoculars) மூலம் பல்லாயிரக்கணக்கானவற்றைக் காண முடியும். இவற்றில் பல "பால் வழி" என அழைக்கப்படும். நட்சத்திரப் பாதையில் காணப்படும். இவ்வழியை முன்னோர் பலர் மோட்சத்திற்குச் செல்லும் வழி என நம்பினர்.

பல நட்சத்திரங்கள் தனிப் பட்டவையாக அமைவாது.

## அபினைக் கண்டுபிடிக்க பொலிஸ் நாய்!

ஹொங்கொங்கில் அபின் மோப்பம் பிடிப்பதில் நாய்கள் பொலிசாருக்குப் பெரும் உதவி புரிந்து வருகின்றன:

அபினை மோப்பம் பிடிப்பதில் பயிற்சி கொடுக்கப்பட்ட முதலாவது ஹொங்கொங் பொலிஸ் நாய் - நிம்ரோட் ஒன்றரை மாதப் பயிற்சியின் பின் கடமையை ஏற்றது.

நிலத்துக்குக் கீழும், சுவருக்குள்ளும், நீர்க்குழாய்களிலும், வேறு மறைவிடங்களிலும் ஒளித்து வைக்கப்பட்ட அபினைக் கண்டு பிடிப்பதில் இந்தப் பொலிஸ் நாய் சாதனை நிலைநாட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2, 3 என கூட்டமாகக் காணப்படும். இவற்றில் இரட்டை நட்சத்திரங்களாகக் காணப்படக் காரணம் இரண்டு நட்சத்திரங்களது ஈர்ப்பின் கவர்ச்சியினாலாகும். ஏனையன பார்வைக்கு இரட்டையர்களாகவும் 3 ஆகவும் தோன்றுமன்றி பல தூர இடைவெளி கொண்டு இருக்கலாம்.

நட்சத்திரக் கூட்டங்கள் வடக்கு வானத்தில் Pleiades என்பது காணப்படும். தூரதிஷ்டிக் கண்ணாடி மூலம் இன்னும் 200 க்குக் மேற்பட்ட நட்சத்திரக் கூட்டங்கள் காணப்படும். இவை யாவும் விண்வெளியில் பிரயாணம் செய்ய ஒரு பொதுவான ஒழுங்கு தோற்றப்பட்ட போது அவை குடும்பமாக அசைவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இயற்கையின் படைப்பில் அறிவுடன் இன்பத்தையும் அநுபவிக்க விரும்பினால் முகிற் கூட்டம் குறைவான கால நேரங்களில் திறந்த வெளியை சில மணி நேரம் அவதானித்துப் பாருங்கள். ஆர்வம் மிகக் கொள்வீர்கள், ஆராய்ச்சி செய்யவும் துணிந்து விடுவீர்கள்!

## புதிய வருடம்: புதிய நம்பிக்கைகள்

மீண்டும் ஒரு புத்தாண்டு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கிறது; புதிய நம்பிக்கைகளும் அதேசமயம் நமது மனதில் மூளை விடாமல் இல்லை!

புத்தாண்டில் தீட்டும் நல்ல திட்டங்களும், உருவாகும் நல்ல நம்பிக்கைகளும் சில மாதங்கள்கூட மனதில் பசுமையாக நிலைப்பதில்லை. எதிர்பார்க்கவியலாத திடீர் திடீர் குறுக்கீடுகளும், முட்டுக்கட்டைகளும் வந்து அந்தத் திட்டங்களை மட்டம் தட்டிவிட்டுப் போய்விடுகின்றன. இதனால் புதிய வருடம், புதிய திட்டங்கள் என்பவற்றையே பலர் தலைமுழுகி விட்டார்கள்.

—நாளைய உணவு எப்படிக் கிடைக்கும் என்பதே இமாலயப் பிரச்சனையாக இருக்கும், எமது நாட்டில் முன்னேற்றத் திட்டங்கள் நிலைக்காது போவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சாதாரண மக்கள் பெரும்பான்மையோருக்குச் சாப்பாட்டைப் பற்றி யோசிக்கவே அவகாசம் போதாமலிருக்கும் போது வளர்ச்சிக்கான திட்டங்கள் பற்றிய சிந்தனை வரும் என்று எதிர்பார்ப்பதே அதிகம் அல்லவா!

— பசித்தவனுக்கு வேதம் போதிப்பதில் பலனில்லை என்பது முதுமொழி. நாட்டின் பிரஜை ஒவ்வொருவருக்கும் உணவு கொடுத்து அவனை ஒரு பிரகாசமான எதிர்காலம் பற்றிச் சிந்திக்கச் செய்ய என்ன வழி என்பதே இந்தப் புத்தாண்டில் அனைவரும் மண்டையைக் குடையும் பிரச்சனையாகும். ஆனந்த வருடம் மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தட்டும் என்று எதிர்பார்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக நிறை ஆரோக்கியத்துக்குக் கெடுதலா?

— சி. மாணிக்கவாசகர்

உங்கள் உடல் பருத்து வருவதாக நீங்கள் அஞ்சுகிறீர்களா? உடல் பருமன் அதிகரிப்பு இருதய சம்பந்தமான நோய்களுக்குக் காரணமாக இருப்பதால் உடல் பருமன் பற்றி நீங்களும் அறிந்து வைத்திருக்க விரும்புவதில் ஆச்சரியமில்லை.

ஒரு மனிதனின் நிறை எவ்வளவு இருக்கலாம் என்பது பற்றி விஞ்ஞானிகள் உலகடங்கிலும் ஆராய்ச்சி செய்து வந்துள்ளார்கள்.

ஒரு மனிதனின் நிறை அளவுக்கு அதிகமாக அல்லது ஆரோக்கியத்துக்கு கெடுதலாக உள்ளது என்பதை எப்படி அறியலாம்?

ஒரு மனிதனின் உயரத்தை அங்குலத்தில் அளந்து அதை இறுத்தலில் அளக்கப்பட்ட அவனது நிறையின் கனமூலத்தால் வகுக்க வரும் எண் (ஈவு) "நிறைச் சுட்டு" ஆகும். உதாரணமாக 135 இறுத்தல் நிறையுடைய ஒரு மனிதனின் உயரம் 71½ அங்குலமாயின் அவற்றிலிருந்து பெறப்படும் நிறைச்சுட்டு 13.7 ஆகும். பொதுவாக நிறைச் சுட்டுக் கூடியவர்கள் அதிக காலம் உயிருடன் வாழக்கூடியவர்களாக இருப்பர்.

வைத்தியகலாநிதி செல்சர் வைத்தியகலாநிதி ஜீன் மேயருடன் காார்வாட் சர்வகலாசாலையில் நடாத்திய பரிசோதனைகளிலிருந்து காப்புறுதிச் சங்கங்கள் உபயோகிக்கும் தரப்படுத்தப்பட்ட "நிறைச் சுட்டு" அட்டவணையின் குறைபாட்டைக் கண்டுபிடித்தார். "நிறைச் சுட்டு" அட்டவணையில் குறிக்கப்பட்ட அளவிலும் சிறிது கூடிய நிறையுடைய மனிதரின் இறப்பு விகிதம் அதிகரிக்கும் என்று கூறமுடியாதென அவர்கள் சுட்டிக்காட்டினர். உதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணமாக பயிற்சி பெற்ற திடகாத்திரமுள்ள உடலமைப்புள்ள ஒரு விளையாட்டு வீரனின் நிறை, நிறைச்சுட்டு அட்டவணையிற் பார்க்கிலும் 25 இருத்தல் கூடியிருந்தால் அவன் சுகதேகி அல்லவென்றோ அல்லது அவன் கெதியில் இறந்து விடுவானென்றோ கூறமுடியாது என அவர்கள் காட்டினர். அதே வேளையில் மெலிந்த தசைநார்க்கட்டுள்ள உயர்ந்த மனிதனின் நிறை, நிறைச்சுட்டு அட்டவணையிலும் பார்க்க 10 இருத்தல் கூடி இருப்பதாகவும் அவர்கள் காட்டினார்கள்.

எனவே ஒரு மனிதனுடைய கொழுப்பின் அளவைக் கணிப்பதற்கு அவனுடைய நிறையைப் பயன்படுத்துவது சரியான முறையாகாது. உடலிலுள்ள கொழுப்பின் அளவைச் சரியாகத் தீர்மானிப்பதற்கு உடலிலுள்ள மடிக்கப்பட்ட தோலின் தடிப்பின் அளவைப் பயன் படுத்துவதே சரியான முறையாகுமென தற்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இதை அளந்தறிவதற்கு 70 டொலர் செலவிற் தயாரிக்கப்பட்ட ஒருவகை அளக்கும் கலிப்பர் மானியை உபயோகிக்கின்றனர்.

## நரம்புத் தொகுதியின் கட்டுப்பாடு

உணவுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு பிரச்சனை மூளையிற் காணப்படும் பசியைக் கட்டுப்படுத்தும் பகுதியையும் உணவுத் திருப்தியை அறிவிக்கும் பகுதியையும் பொறுத்ததாகும். இவ்விரு பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள செயல்களை நிறைவேற்றினாலும் இவையிரண்டும் ஒரேபகுதிகள் அல்ல. பசியினால் உண்டாகும் உணர்ச்சி எல்லோரிலும் ஒரே தன்மையான தாக்கத்தை உண்டாக்குவதில்லை. மனோ நிலைகள் உண்ணும் தூண்டலின் அளவு, உணவைப் பற்றிய முந்திய நிலைகள் என்பன மிகவும் சிக்கலானவை என வைத்திய கலாநிதி மேயர் கூறுகின்றார். பசி உணர்ச்சி நின்றவுடன் உண்ணும் திருப்தியைத் தெரிவிக்கும் உணர்ச்சியும் நின்றுவிடுமென்று கூறமுடியாது. புத்தியுள்ளவர்கள் மேலதிகமாக உண்ண வேண்டுமென்ற உணர்ச்சி மறையாது விட்டாலும் போதிய உணவை அருந்தியவுடன் மேலதிக உணவு உண்பதை நிறுத்தி விடுவார்கள்.

## அப்பெஸ்றராஸ் கலன்களின் ஆதிக்கம்

மூளையின் அடிப்பாகத்தில் '' அப்பெட்டாஸ் '' (Appestas) என்று அழைக்கப்படும் நரம்புக் கலன்களைக் கொண்ட பல கூட்டங்கள் காணப்படுகின்றன. உலையிலுள்ள நெருப்பின் வெப்பத்தை தேமோஸ்ராற் (Ther-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mostat) கட்டுப்படுத்துவது போல இவை இரத்தத்திலுள்ள சருக்கரையைக் கட்டுப்படுத்துகின்றன. இவை மிகவும் சிக்கலான அமைப்பை உடையவை. தலையில் ஏற்படும் பெரியகாயம் மூளைப் பாதிப்பு, பொன்னின் கலப்புப் பொருட்களுள்ள ஊசி மருந்துகள் ஏற்றுதல், என்பவைகளால் ஊசி ''அப்பெட்டாஸ்'' பாதிக்கப்படக் கூடியவை. தலையில் காயம் ஏற்படும்படி விபத்தில் இக்கிய ஒருவரின் உடல் நிறை சடுதியாக 300 இருத்தலிலும் கூடிவிட்டது. பிரபல வைத்திய நிபுணர்களின் பெருமுயற்சிகளும் அவரது நிறையைக் குறைக்க முடியாது வீண் போய்விட்டன.

## பழைய கொள்கைகள் நிராகரிக்கப்படல்

இற்றைவரை தைரோயிட் (Thyroid) சுரப்பியின் கோளாற்றினால் உடற்பருமன், நிறை என்பன அதிகரிக்கின்றனவென்னும் கொள்கை நிலவி வந்தது. ஆனால் தற்பொழுது அக்கொள்கையை வைத்திய நிபுணர்கள் நிராகரிக்கின்றனர். தற்பொழுது இரத்தத்திலுள்ள அயோடினின் அளவைத் தீர்மானிக்கும் பரிசோதனைகளே நடாத்தப்படுகின்றன. சில வைத்தியர்கள் இப்பரிசோதனையைச் செய்த பின்னர்தான் தைரோயிட் குளிகைகளை நோயாளருக்குக் கொடுக்கின்றனர்.

பழைய கொள்கைகளின்படி கொழுத்த உடலையுடையவர்களின் சதையச் சுரப்பி சுரக்கும் இன்சுலின் (Insulin) அளவு குறைவு என்பதாகும். ஆனால் வைத்திய கலாநிதி சஸ்மன், பன்னிரண்டு உடல் பருத்த நோயாளிகளில் நடாத்திய பரிசோதனைகளிலிருந்து அவர்கள் எல்லோரினதும் சதயச் சுரப்பிகள் இன்சுலினைப் போதிய அளவு சுரந்தன என்று கண்டனர், எனவே பழைய கொள்கை இப்பொழுது கைவிடப்பட்டது.

## குறைந்த அளவு உணவை உண்ணல்

உடல் நிறையைப் பொறுத்த நோயாளரை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது வகையைச் சேர்ந்தவர்களின் நிறையை அவர்களின் உணவின் அளவைக் குறைத்து பசியைக் குறைக்கும் மருந்து வகைகளை உட்கொள்வதினால் குறையச் செய்ய முடியும் ஆனால் மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்களின் நிறையை அவர்களின் உடலமைப்பிலுள்ள மூலகாரணத்தால் குறையச் செய்ய முடியாதிருக்கின்றது. அவர்களை எங்கள் சமூகத்திலிருந்து தள்ளியும் வாழ்க்கையில் வெறுப்படையச் செய்யவும் விடாது. எங்கள் சகோதரங்களாக அன்புடன் நடத்துவதே சிறந்த வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையைக் கிளற

## சற்றே சிரிக்க



ஒருவர் : மரியாதையாக நடந்து கொள்வதால் எவ்வித நட்டமும் இல்லை. you know Courtesy always pays

மற்றவர் : ஐயா அது எல்லாம் அந்தக்காலம். போயும் போயும் இலங்கையில் நாம் படும்பாட்டைப் பார்த்தும் இங்கிலீஸ் பேச்சுப் பேசுநீரே காணும்.

ஒருவர் : அது என்னவோ ...... நான் சொன்னது உண்மை.

மற்றவர் : தவறு ! தவறு !! விருப்பமானால் எமது இ. போ. ச. பஸ்ஸில் மரியாதை காட்டிப்பாரும் உம்முடைய "சீட்" தான் பறிபோகும்.

ஒருவர் : ? ? ?

x x x x

ஓர் ஈ மற்றோர் ஈயைப் பார்த்துக் கேட்டது :

"கண்ணே, இருட்டிவிட்டது மனை திரும்புவோமா?"

மற்றது : அன்பே நடப்போமா? அல்லது நாய் வாகனத்தை அமர்த்திக்கொள்வோமா ?

நீதிபதி : வாதியை ஏன் நீ கதிரையால் அடித்தாய்?

குற்றவாளி : ஐயா எனக்கு வந்த கோபத்திற்கு மேசையைத் தூக்க முடியாமல் போனதே காரணம். மன்னித்துக்கொள்ளுங்கள். அடுத்தமுறை பலமிருந்தால் விடுகிறேனே பாருங்கள்.



பெண் : இந்தப் பார்சலை அனுப்பவேண்டும்.

தபாலாபீசர் : அம்மா அநாவசியமாக ஏராளமான தபால் தலைகளை ஒட்டியுள்ளீர்களே ?

பெண் : ஐயையோ நல்லவேளை அவதானித்து விட்டீர்கள் ! அல்லாவிட்டால் பார்சல் வெகுதூரம் போய்த்தொலைந்திருக்குமே.

— சால் ஷீட்லிங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செய்திக் கதிர்

## பிச்சைக்காரரிடமும் டெலிவிசன் உண்டு

பாகிஸ்தானில் பிச்சைக்காரரின் தொகை அதிகரித்து வருகிறது. ஆனால் அண்மைக்கால அரசாங்க ஆய்வுகளின்படி பலர் உண்மையில் பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளவர்களே அல்ல. இங்குள்ள, ஐந்து பிச்சைக்காரர் கொண்ட ஒரு குடும்பத்திடம் ஒரு தொலை நோக்கியும், வேறு பல ஆடம்பர வீட்டுத் தளபாடங்களும் இருந்தன என்று சொல்லப்படுகின்றது.

தற்போது பிச்சையெடுப்பது ஒரு இலாபகரமான தொழிலாகவிருப்பதால், பிச்சை யெடுப்பவரின் தொகை கராச்சியில் 1965-ம் ஆண்டில் 1,500 இலிருந்து. தற்போது 30,000 வரை உயர்ந்துள்ளது, என்று, சமுதாயத் தீங்குகள் பற்றி ஆராய்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு அறிவித்துள்ளது. இக்குழு மேலும் கூறியதாவது. ''கராச்சியிலிருக்கும் பிச்சைக்காரர் சுகதேகிகள், விருப்பமின்மை என்ற ஒரே யொர் காரணம் தான் அவர்களிடம் காணப்படுகின்றது''

தொழில் நுட்பம் அல்லாத வேலையினால் கிடைக்கும் ஊதியத்திலும் பார்க்க பிச்சையெடுப்பதால் கிடைக்கும் உடனடிச் சலுகைகள் மேலாகத் தோன்றுவதால் இவர்கள் பிச்சையேற்க நினைக்கின்றனர். (தொழில் நுட்பம் அற்ற வேலையின் மாதாந்த ஊதியம் 140 பாகிஸ்தான் ரூபாய்களாகும். இது எமது பணத்தில் 218 ரூபாய்கட்கு சமனாகும்.) பிச்சையெடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் நன்றாக ஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட மாவட்டங்களை ஒழுங்குபடுத்தியுள்ளனர். மற்றவரின் எல்லைக்குள் சென்று அவர்களின் ஊதியத்தை அபகரிக்கமாட்டார்கள்.

ஒரு நடமாட்டம் கூடிய சந்தியில் உள்ள கடையொன்றின் முன்புறத்திலுள்ள நடைபாதையில் நின்று பிச்சையெடுப்பதற்காக ஒரு முதிய பிச்சைக்காரன் அந்தக் கடைக்காரனுக்கு வாடகை கொடுக்கிருன் என்றும் சொல்லப்படுகின்றது.

இப் பிச்சைக்காரர்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெருகியுள்ளனர். இவர்களை "ஆண்டிகளின் அரசன்" என்று கூறுவர். இவர்கள் அநாதைச் சிறுவர்களினதும், கடத்தப்பட்ட சிறுர்களினதும் ஊதியத்தில் வாழ்க்கை நடாத்துகின்றனர்.

இச் சிறுவர்கள் தினமும் அவரவர்க்கு என்று குறித்த இடங்களுக்கு வாகனமூலம் கொண்டு செல்லப்பட்டும், பின்பு இரவு வேளைகளில் திரும்பவும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவர்களுக்கு உணவு கொடுக்கப்பட்டாலும், சில சமயங்களில் அடியும் வாங்க நேரிடும்.

இத்தொழிலின் ஊதியத்தை அதிகப்படுத்துவதற்காக இச் சிறுர்கள் ஊனமாக்கப் படுவதும் உண்டு, என்று ஆராய்ச்சிக் குழு கூறுகிறது.

## முயற்சியுடையோர்

## இகழ்ச்சியடையார்

சிறிய முயற்சியாஞலும் தொடங்குவதற்கு அஞ்சாதீர்கள் பெருங்காரியங்கள் பின்னேவரும். தீரராகுங்கள். மக்களுக்குப் பணிசெய்யுங்கள். நாம்தான் நெறிகாட்ட முடியும் என்ற பித்தால் வாழ்க்கைக் கடலில் அநேகமான பெருங்கப்பல்கள் மூழ்கிவிட்டன. இதனைச் சிறப்பாகக் கவனித்து நடவுங்கள். அதாவது சாவே வந்தாலும் தன்னலமற்று இருந்து செயல் புரியுங்கள்.

— சுவாமி விவேகானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலையை மாற்றுவது பற்றி

# விஞ்ஞானிகள் எச்சரிக்கை

14 விஞ்ஞானிகளைக் கொண்ட குழு ஒன்று ஆக்டிக் கடலில் உள்ள பனிக்கட்டியை உருக்கும் பெரிய திட்டத்துக்கு ஓர் எச்சரிக்கை விட்டிருக்கிறது. பனிக்கட்டியை உருக்கினல் பூமியின் காலநிலையில் பெரிய மாற்றம் ஏற்படும் என்றும் இம் மாற்றம் கடைசி வரையும் நீடிக்கும் எனவும் கூறுகின்றனர்.

விஞ்ஞானம், காலநிலையை மாற்றுவதால் ஏற்படும் சாத்தியமான விளைவுகளை அறியுமட்டும் அவர்கள் அதை மாற்றுந் திட்டங்களைத் தடுப்பதற்கு ஒரு சர்வதேச உடன்படிக்கையை அவர்கள் ஏற்படுத்தவிருக்கிறார்கள்.

எரிபொருட்களை அழித்ததில் உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இது பூமியின் காலநிலையில் பல மாற்ற முடியாத பல திருப்பங்களைக் கொண்டுவரலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

அவர்கள் ஆக்டிக்கடல்ப் பனிக்கட்டியைக் குறைத்தலோ அல்லது நீக்குதலோ 100 வருடங்களுக்குள் நிச்சயமாக ஏதேனும் விளைவைக் கொண்டுவரும் எனக் கூறுகிறார்கள்.

30 விஞ்ஞானிகள் சேர்ந்து 290 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள்.

## மனைவியின் சாதனை?!

போன மாதம் என் மனைவியின் பெயரிலுள்ள வங்கிக் கணக்கில் £ 135 பாக்கியுள்ளதென அவளது செக் புத்தகம் காட்டியது. ஆனல் வங்கி அவள் £ 7 ஓவர் டிராஃப்ட் செய்துள்ளதாக அறிவித்தது. அதற்கு என் மனைவி "இவ்வளவுதானே இதற்கெல்லாம் அவர்களோடு நான் தகராறு செய்யப்போவதில்லை." என்று கூறி உடனே வங்கியின் பெயரில் £ 7-க்கு ஒரு செக் எழுதியனுப்பிவிட்டாள்.

— தழுவல்: ஜே. ஆர்ரோமென் ஒலிவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை உரம்

மாயவரம் எஸ். மகாலிங்கம்

[ பூமியைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம் எங்கும் கிடைக்கும் பொருளைக் கொண்டு தயாராவது இது. இன்று எமது நாட்டில் காணப்படும் உரத் தட்டுப்பாட்டிற்குப் பதில்கூறும் வண்ணம் நாம் எவ்வாறு எமது உற்பத்திப் பெருக்கத்தை படைவது என ஆராய்கிறது இக்கட்டுரை. ]

மண் வளம் அடைய, பயிர்கள் செழிப்பாக வளர, நைட்ரஜன் என்ற மூலகம் மிகவும் அவசியம். நைட்ரஜன் இயற்கையில் அதிக அளவில் காணப்படுகிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் ஐந்தில் நான்கு பங்கு நைட்ரஜனும் ஒரு பங்கு பிராணவாயுவும் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் இயற்கையில் கிடைக்கும் இந்த நைட்ரஜனை விளையும் பயிர்கள் நேரடியாக உபயோகித்துக்கொள்ள முடியாது. அது தண்ணீரில் கரையாத மந்தமான வாயு. ஆகவே, அந்த நைட்ரஜனை உபயோகமுள்ள வகையில், தண்ணீரில் கரையாத, மந்தமான வாயு. ஆகவே அந்த நைட்ரஜனை உபயோகமுள்ள வகையில் தண்ணீரில் சுலபமாகக் கரையும் நைட்ரஜன் உப்புக்களாக மாற்ற வேண்டும். அம்மோனியம் நைட்ரேட், அம்மோனியம் ஃபாஸ்ஃபேட் அம்மோனியம் ஸல்ஃபேங், யூரியா போன்றவை நைட்ரஜன் உப்புக்கள். இவை எல்லாவற்றிலும் நைட்ரஜன் இருந்தாலும், அம்மோனியம் ஸல்ஃபேட்டில்தான் அதிக அளவில் நைட்ரஜன் இருக்கிறது. அம்மோனியம் ஸல்ஃபேட், நைட்ரஜன் சத்து நிறைந்த தாவர உணவுப் பொருள்,

1953 ஜூன் மாதம் அமெரிக்காவில் விவசாய விஸ்தரிப்புச் சேவையில் வேலைபார்த்த பிராங்க் ஷீமன் என்பவர் அலகாபாது விவசாய நிலத்திலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் விவசாயிகளின் முன்னிலையில் கண்கூடாக நடத்திய பரிசோதனைகளின் மூலம், நைட்ரஜனின் பலன்களை எடுத்துக் காட்டினார். கோதுமை வயல் ஒன்றில் ''கம்போஸ்ட்'' உரத்தை வைத்தார். முன்பு ஏக்கருக்கு 11 மணங்கு விளைந்த இடத்தில் ஏக்கருக்கு 22 மணங்கு விளைந்தது. கம்போஸ்ட் உரத்தில் இருநூற்றில் ஒரு பங்கு நைட்ரஜன் இருக்கிறது. இன்னொரு வயலில் சணல் செடியைப் பசுந்தழை உரமாக வைத்தார். கோதுமை விளைவு ஏக்கருக்கு 30 மணங்காகப் பெருகியது. சணல் செடியில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ பங்கு தான் நைட்ரஜன் இருக்கும். இன்னும் ஒரு வயலில் அமோனியம் ஸல்ஃபேட்டை வைத்தார். ஏக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு 37½ மணங்கு விளைந்தது. இது நைட்ரஜன் வைக்காத வயல்களில் விளைந்ததைவிட 70 சதவிகிதம் அதிகம். அம்மோனியக் ஸல்ஃபேட்டில் நூற்றுக்கு இருபது பங்கு நைட்ரஜன்.

இந்த அற்புதத்தைக் கண்ணுரக் கண்ட விவசாயிகள், நைட்ரஜனின் முக்கியத்தை உணர்ந்து, தங்கள் வயல்களிலும் அம்மோனியம் ஸல்பேட்டை உபயோகிக்கத் தொடங்கினுர்கள். அம்மோனியம் ஸல்ஃபேட் ரசாயன முறைப்படி உற்பத்தி செய்யப்படும் ஓர் உரம். இயற்கையில் இந்தப் பொருள் கிடைப்பதில்லை. இது தாவரங்களின் முழு உணவுப் பொருள் அல்ல. ஆனுல் ஒரு டானிக்கைப் போன்றது. பட்டினியால் வாடும் பயிர்களுக்கும், நைட்ரஜன் குறைவைப் போக்குவதற்கும் அம்மோனியம் ஸல்ஃபேட்டை உபயோகிக்கலாம். இந்த உப்பை உபயோகிப்பதால் இலை, தழைகள் அடர்ந்து வளருகின்றன. அதனுல்தான் முட்டைக் கோசு, காலி ஃப்ளவர் போன்ற கீரைப் பயிர்களுக்கு இது அதிகமாக உபயோகப்படுகிறது. மண்ணில் மற்ற ரஸ்மான பொருள்கள் போதிய அளவு இருந்தால் பழச் செடிகள், கிழங்கு வகைகள் ஆகியவற்றின் உற்பத்திக்கும், புதிதாக நட்ட நாற்றுக்கள் துரிதமாக வளரும்படி செய்வதற்கும் பூச்சிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வளர்ச்சி பெறமுடியாத நிலையில் இருக்கும் பயிர்கள் மீண்டும் உயிர்பெற்று வளருவதற்கும், வெண்காயம், காரட், பீற்ருட் ஆகிய பயிர்கள் வெகு சீக்கிரத்திலேயே பலன் கொடுக்கும்படி செய்வதற்கும், கத்தரிக்காய், மிளகாய், தக்காளி இவை அதிக பலனைக் கொடுப்பதற்கும் அம்மோனியம் ஸல்ஃபேட் பயன்படுகிறது,

அம்மோனியம் ஸல்ஃபேட் சர்க்கரை போன்ற பளபளப்பான வெண்மையான பொருள். சர்க்கரையைப் போல் தித்திக்காது. இந்த உப்பை அப்படியேயும் உபயோகிக்கலாம்; தண்ணீரில் கரைத்தும் உபயோகிக்கலாம். எந்த விதமாக உபயோகித்தாலும், எல்லா இடங்களிலும் சம அளவில் இருக்கும்படி உபயோகிப்பது முக்கியம். காய்கறிச் செடிகளை வரிசை வரிசையாக ஒழுங்காக நட்டிருந்தால், இந்த உரத்தை இரண்டு வரிசைகளுக்கு நடுவில் போட்டு, மண்ணைக் கிளறிவிட்டு, அதன் பிறகு தண்ணீரைப் பாய்ச்ச வேண்டும். அம்மோனியம் ஸல்ஃபேட் எளிதில் கரைந்து போகக்கூடிய பொருள். எனவே, தண்ணீரை அதிகமாகப் பாய்ச்சி விட்டால், இதன் உணவுச் சத்து பூமியில் வேர்களும் கீழே எட்ட முடியாத ஆழத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடும்; அப்போது இதன் நன்மை செடிகளுக்குக் கிடைக்காமல் போய்விடக் கூடும். செடியின் அளவைப் பொறுத்து, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சிறு முளைகளாக இருந்தால், தண்ணீரை லேசாகத் தெளித்தால் போதும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாப்பு ஆரம்பமாகும் நிலையில் இருக்கும் பயிர்களுக்குச் சாதாரணமாக ஒரு சதுர கஜத்துக்கு ஓர் அவுன்ஸ் வீதம் ஒரு பவுண்டு அம்மோனியம் ஸல்ஃபேட்டை 16 சதுர கஜ விஸ்தீரணமுள்ள நிலத்தில் உபயோகிக்கலாம். ஒரு சிகரெட் டின் நிறைய ஏழு அவுன்ஸ் அம்மோனியம் ஸல்ஃபேட் கொள்ளும். ஒரு சிகரெட் டின் நிறைய இந்த உப்பை எடுத்துக் கொண்டால், அதை ஏழு சதுர கஜ நிலத்துக்கு உபயோகிக்கலாம். செடிகளுக்குத் தண்ணீர் விடுவதற்கு உபயோகிக்கும் பூவாளி சாதாரணமாக மூன்று கலன் தண்ணீர் பிடிக்கிறது. அம்மோனியம் ஸல்ஃபேட்டைத் தாராளமாக உபயோகிப்பதாயிருந்தால், இந்தப் பூவாளியில் ஒவ்வொரு தடவையும் ஒன்றரை அவுன்ஸ் அமோனியம் ஸல்ஃபேட்டைக் கரைத்து ஒன்றரைச் சதுர கஜ நிலப்பரப்பில் உபயோகிக்க வேண்டும். சிறிய செடிகளுக்கும், முளைத்துச் சில நாளே ஆகியுள்ள செடிகளுக்கும் இதில் பாதி அளவு உபயோகித்தால் போதும். அம்மோனியம் ஸல்ஃபேட்டை மாதத்துக்கு ஒரு முறையோ அல்லது சிறிதளவில் அடிக்கடியோ உபயேகிக்கலாம். ஆனால் மறு முறை உபயோகிப்பதற்கு முன்னால் பதினைந்து நாளாவது ஆகியிருக்க வேண்டும். நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய குளிர் மாதங்களில், ஆயிரம் சதுர அடிக்கு ஒரு தடவை ஏழு பவுண்டு வீதம் இந்த நான்கு மாதங்களுக்கும் மொத்தம் 28 பவுண்டு தேவையாக இருக்கும். வருஷம் முழுவதும் புஷ்பிக்கும் செடிகளுக்கு அம்மோனியம் ஸல்ஃபேட்டை ஆரம்ப காலத்தில் ஒரு தடவை உபயோகித்தால் போதும். புல் தரைகளுக்கு புல்லின் தரம் உயர்ந்த ரகமாயிருந்தால் சதுர கஜத்துக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் உபயோகிக்க வேண்டும். ஆனால் களைகள் வளராமல் உள்ள இடங்களில் மாத்திரமே அம்மோனியம் ஸல்ஃபேட்டை உபயோக்க்க வேண்டும். அளவுக்கு மிஞ்சி உபயோகித்தால் நன்மையை விடக் கெடுதல்தான் அதிகமாக ஏற்படும். ஃபாஸ்ஃபேட் அல்லது பொட்டாஷ் கலந்த ரசாயன எருவுடன் பொருத்தமான விகிதாசாரத்தில் கலந்தே இதை உபயோகிக்க வேண்டும். சோளம், மக்காச் சோளம் இவற்றுக்கு அம்மோனியம் ஸல்ஃபேட்டை உபயோகித்ததில் நல்ல விளைவு கிடைத்தது.

ஏக்கருக்குச் சுமார் 100 ராத்தல் அம்மோனியம் ஸல்ஃபேட்டைச் சராசரி எல்லா நிலத்துக்கும் உபயோகிக்கலாம் என்று, விவசாய நிபுணர்கள் தங்கள் நீண்ட கால ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்திருக்கிறார்கள். சாதாரணமாக 100 ராத்தல் அம்மோனியம் ஸல்ஃபேச் பதினைந்து ரூபாய் விலைக்கு விற்கிறது. ஓர் ஏக்கரில் இதனால் 3 மணங்கு விளைவு கூடுதலாகிறது. மணங்கு பத்து ரூபாய் வீதம் நெல்லுக்கு விலை கிடைப்பதாயிருந்தாலுங்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபம் ஓர் ஏக்கருக்குச் சுமார் 15 ரூபாயாவது இடைக்கிறதல்லவா!

இவ்வளவு உபயோகமுள்ள அம்மோனியம் ஸல்ஃபேட் உரத்தை உற்பத்தி செய்வதற்குத்தான் சுதந்தர இந்திய சர்க்கார் பிஹாரில் உள்ள சிந்திரி என்னும் இடத்தில் 'ரசாயன உர ஃபாக்டரி' ஒன்றை 23 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆரம்பித்தார்கள். இந்த ஃபாக்டரி ஆசியாவிலேயே மிகப் பெரியது. நாள் ஒன்றுக்கு 1000 டன் அம்மோனியம் ஸல்ஃபேட் உற்பத்தி செய்யக்கூடிய சாதனம் இங்கே இருக்கிறது. 1954 - அக்டோபரில் மொத்தம் 30,009 டன் உற்பத்தியாயிற்று. 1954 - நவம்பர் 5—ஆந் தேதி 1115 டன் உற்பத்தியாகி, உற்பத்தி உச்ச நிலையை அடைந்தது. சிந்திரியில் உர உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படு முன், அதிகப் பணத்தைச் செலவழித்து வெளி நாடுகளிலிருந்து உரத்தை வரவழைக்க வேண்டியிருந்தது. நம் பணம் அநாவசியமாக வெளி நாட்டுக்குப் போய்க்கொண்டிருந்ததுடன் அப்படி வாங்கிய உரமும் இந்தியாவுக்குக் குறிப்பிட்ட காலத்தில் வந்து சேர முடியாத நிலையில் இருந்தது. இதனுல் உணவு உற்பத்தி மிகவும் பாதகம் அடைந்தது. சிந்திரி உற்பத்தித் தொழிற்சாலை ஏற்பட்டவுடன், குறைந்த விலையில் குறுகிய காலத்தில் விவசாயிகளுக்கு வேண்டும்பொழுது வேண்டிய அளவு உரம் இடைக்கிறது. நம்முடைய பணமும் அநாவசியமாக வெளி நாட்டுக்குப் போவதில்லை. சிந்திரியைப் போலவே விஜயவாடாவிலும் உர உற்பத்திச்சாலை ஒன்றை டெல்டா பிரதேசங்களில் உள்ள அதிகப்படியான தேவையைப் பூர்த்தி செய்ய நிறுவ வேண்டுமென்று ஆந்திர ராஜ்யசர்க்கார் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறியிருக்கிறுர்கள். ரசாயன உரச் சாலையில் காற்றில் உள்ள நைட்ரஜனை ரசாயன முறையால் அம்மோனியம் ஸல்ஃபேட்டாக மாற்றுகிறுர்கள். பூமியின் ஒரு சதுர மைல் பரப்புக்கு மேலே இருக்கும் காற்றில் உள்ள நைட்ரஜன் 20,000,000 டன்கள் என்று கணக்கிட்டிருக்கிறுர்கள் இவ்வளவு நைட்ரஜனையும் உபயோகமுள்ள நைட்ரஜன் உப்புக்களாக மாற்றிஞல் அரை நூற்றுண்டுக்கு உலகத்தில் உள்ள பயிர்களுக்கெல்லாம் வேண்டிய உரம் கிடைக்கும் என்று ஒரு விஞ்ஞானி கூறுகிறுர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பும் நிபந்தனையும்

யாழ்தேவியில் பயணத்தை மேற்கொண்டு, பிரயாண அலுப்பிக் களைப்புடன் வந்திறங்கும் உங்களை எமது வரவேற்பாளர் உபசரிக்க எண்ணியுள்ளார், அதாவது உங்களுக்கும் உங்களது நண்பர் ஒருவருக்கும் தனக்குமாக நல்ல குளிரூட்டிய பழரசம் மூன்று கோப்பைகளில் எடுத்து வைத்திருக்கின்றார். ஆனால் அதனை அவர் தருமுன் பின்னரும் ஒரு நிபந்தனை போடுகின்றார்?

அடுத்தடுத்து மூன்று கோப்பையிற் பழரசத்தையும் அடுக்கிப் பின்னர் மூன்று வெற்றுக் கோப்பைகளையும் அவ்வாறே தொடர்ந்து அடுக்கி, ஒரு நேர்வரிசையில் வைத்துள்ளார். அதாவது மூன்று கோப்பை பழரசமும் மூன்று வெற்றுக் கோப்பையுமாக ஆறு கோப்பைகள் நேராக ஒரே வரியில் அடுக்கப்பட்டுள்ளன. பழரசம் நிறைந்த ஒரு கோப்பை ஏதாவது ஒன்றை மட்டும் அசைத்தோ அல்லது அந்தக் கோப்பையிலுள்ள பழரசத்தை வெற்றுக் கோப்பைகளில் ஊற்றியோ, இவ்வரிசையில் ஒன்றை விட்டு ஒன்று என்ற ஒழுங்கில் பழரசம் நிறைந்த கோப்பைகள் காணப்பட வேண்டும். அதாவது 1-வது கோப்பை வெற்றுக் கோப்பையாகில் 2-வது கோப்பை பழரசம் நிறைந்ததாகவும் 3-வது கோப்பை வெறுமனேயும் இருக்க வேண்டும் - 4-வது பழரசத்துடன் காணப்படவேண்டும். மறக்க வேண்டாம். ஒரேயொரு பழரசக் கோப்பையைத்தான் அசைக்க முடியும். எங்கே முயன்று பாருங்கள்.

உங்கள் பதிலை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் புதிர் கதிர் 9-வது படிவத்துடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

சரியான விடையளித்த அதிட்டசாலிகளுக்குச் செங்கதிர் இலவசமாக 12 இதழ்கள் அனுப்பி வைக்கப்படும். ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட விடைகளை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிவத்துடன் அனுப்பப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிர் 8-ல் வெளிவந்த

## வேகமா? நேரமா? தூரமா?

என்ற புதிரின்

**விடை**

மாறுன கதியில் யாழ்தேவி செல்வதால் S = Ut (1) அதாவது இங்கு S = புகையிரதம் சென்றதூரம்: U அதன் மாறுக் கதி t = பிரயாண நேரம் என்க. 8 மை / ம கூடிய கதியில் சென்றால் t – 1 நேரமாகும்.

$$S = ut + \tfrac{1}{2} ft^2$$

$$\therefore \quad S = (u + 8)\ (t - 1) \quad \ldots \quad (2)$$

இவ்வாறே $S = (u - 12)\ (t + 2) \quad \ldots \quad (3)$

1-வது 2-வது சமன்பாட்டிலிருந்து

$$ut = (u+8)\ (t - 1)$$

அதாவது $u - 8t + 8 = 0$ (அ)

இவ்வாறே $ut = (u - 12)\ (t + 2)$

அதாவது $2u - 12t - 24 = 0$ (ஆ)

(அ) (ஆ) விலிருந்து

$$\frac{u}{192+96} = \frac{t}{16+24} = \frac{1}{16-12}$$

$$\therefore \quad u = 72$$

$$t = 10$$

ஆகவே யாழ்தேவி சென்ற தூரம் 720 மைல்.

சரியான விடையளித்துப் பரிசைப் பெறுபவர்கள்.

1. செல்வி, கங்கா குழந்தைவேலு நவாலி தெற்கு, மானிப்பாய்
2. தி. சித்திரவேல், ஆலடி, புலோலி, இயக்கச்சி

## தொடையும் எடையும்

உங்கள் தொடை எலும்பின் நீளம் என்ன என்று சொல்லுங்கள் நாம் உங்கள் உயரம் என்னவென்பதை 'சட்' என்று கூறிவிடுவோம்?

[ பக்கம் 40 பார்க்க ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியும் நாளை

தன்னிறைவில் தெரிவமாகத் தாவித்திரியும் தன் சேயின் போக்கினை சற்றேனும் மனதில் கொள்ளாது தன்னை அன்புடன் வளர்த்து வரும் விவசாயியின் புலம் நோக்கிச் செங்கதிர் தன் செவ்வொளி கக்கும் அதிகாலையில் தன்னுள்ளத்தில் கடமையுணர்ச்சி பொங்க, தன் கழுத்தில் கட்டிய பெற்சலங்கையென பளபளக்கும் சலங்கையுடன் கூடிய மணிகளின் நாதம் அருகே காணும் அவ்வூர் ஆண்டவனின் கோவில் நின்று எழும் மணியோசையுடன் முட்டி மோதி ஊரெங்கும் எதிரொலிக்க, கூடு சென்ற பறவையினம் பகலவனின் வருகையினை அங்குமிங்குமாக அறிவித்து ஆரவாரிக்க நேற்றுவரை சூழமியிருந்த இருள்களை நம்மிடமிருந்து அகற்றிவிட இதோ வருகிறான் செங்கதிரோன் என ஆவலுடன் கிழக்கில் விளக்காக விரைந்து எழுஞ் சூரிய பகவான் வரும் திசையை ஆசையுடன், பகலவன் பட்டொளி தன்னும் தன்னைச் சுட்டுவிடாது தன் தலையினிலே தலைப்பாகை சூடி, தன் கடமைக்கு காலை வெறு வயிற்றுடனே வயற்களம் நாடும் நம் நாட்டு விவசாயி ஒருவன் தன்னின் சூழ்நிலையை நாம் இங்கு கண்டு களிப்புற்று ஆகா! இவ்வாழ்வு நல்வாழ்வு சுகவாழ்வு சுதந்திர வாழ்வு என்றெல்லாம் அலட்டுகின்றோம், அந்தோ, உண்ண உணவின்றி ஊன் சுருங்கிய போதும் ஊக்கமது கைவிடாது உலகினுக்கு உயிரளிக்கும் கமக்காரன் களிப்புக்கு காலம் தரும் சோதனைகளின் கணக்கிற்கோர் எல்லை இல்லையா என்ற கேள்வி யார் மனதில் இன்று தோன்றுகிறது என நம்மவரில் நாலுபேராவது சிந்தித்ததுண்டா? என யாரோ ஒரு செம்மல் கேட்பது போல் நம் நரம்பினை நாளக் கயிறுகளை நாளாந்தம் பின்னிப் பெருக்கி வரும் ஒரு சின்னஞ்சிறு நெல்மணி ஆறறிவு கொண்ட ஒரு மனிதனைத் தட்டிக் கேட்கத் துணிந்தால் நாம் என்ன பதில் சொல்லுவோம் என வெட்கித் தலை குனியப் போகிறீர்கள் என்று இடித்துரைக்கும் ஒரு உணர்ச்சிக் காவியத்தைக் கருத்துடன் தந்து நம் ஓவியர், மாரின் பரிதாப நிலைக்கு பாரபட்சமின்றி அபயம் அளித்து வரும் பகலவன் தானே நலமானது நீ நாட்டின் நலனுக்கு நயமாக உழைத்திடு நல் வாழ்த்துக்கள் என நம்பிக்கையூட்டும் வகையில் உலகினை உலுட்டிக் கொண்டு உருவம் பெறும் உயர் சித்திரத்தை இவ்விதழில் தருகின்றார்.

— தாரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TO COVER INTERNATIONAL INTERESTS

here is

AN INTERNATIONAL NEWS LETTER

# MAXIMS

P. O. Box 47, Jaffna, Sri Lanka

Cable : SUNZONE Jaffna

To be released in June 1974.

Exchange your opinions,
Experiences and even criticisms
on an international level with reference to

* Mysteries of Supernaturalism
* Influence of Yoga
* Exorcism
* Drug Abuse
* Population Explosion etc.

through — MAXIMS —

---

A sister paper of "Sengkathir" – An educational monthly in Tamil

ADVERTISEMENT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தளபாடங்கள்
தவணைமுறையில் பெறுவதற்கு
சதா ஹோம் நீட்ஸ்
280, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்

For everything you need
In the way you need

VISIT
SATHA HOME NEEDS
Also easy instalment terms to suit your purse
280, K. K. S. ROAD
JAFFNA

ADVERTISEMENT

எங்களுக்கு விளம்பரம்
தேவையில்லை

கொழும்பு ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

புகைப்படம், புளொக்ஸ், றபர் சீல், லேசட்டேசஸ்ரற், புளூபிறின்ட்
தயாரிப்பாளர்கள்

தொலைபேசி : 410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகத்தைச் சிதைக்கும் முகப்பரு

*[ வாலிபப் பருவத்திலே பெரிதும் தோன்றும் தொல்லைதான் என்றாலும் அசட்டை செய்யலாகாது. ]*

பழைய காலந் தொடக்கமே உலகம் முழுவதும் பெண்கள் தங்கள் முகத்தின் குறைகளை நீக்கிக் கொள்ள முயன்று வருகிருர்கள் சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்கு முன் ஐரோப்பியப் பெண்களின் அலங்காரக் கலையிலே ஒரு விசித்திரமான பழக்கம் இருந்தது. தங்கள் முகத்துக்கு அவர்கள் ஒட்டுப் போட்டுக் கொண்டார்கள்! கறுப்பு டஃபேட்டா பட்டையோ மெல்லிய ஸ்பானியத் தோலையோ கோந்து தடவிய காகிதத்தையோ நட்சத்திரம், பிறைச் சந்திரன், வைரம் போன்ற வடிவங்களில் துண்டு துண்டாக வெட்டி, நெற்றியிலும் முகத்தின் பிற பகுதிகளிலும் வகைக்கு ஒன்றை ஒட்டிக் கொள்வார்கள். முகத்தில் குறை உள்ள பெண்களுக்கு இந்தப் பழக்கம் சிறந்த உதவியாக இருந்ததாம்.

இளைஞரின் முகத் தோற்றத்தைப் பெரும்பாலும் கெடுப்பவை பரு (Pimple), பாலுண்ணி (Black-head) இரண்டுந்தான். தோலிலுள்ள எண்ணெய் நாளத்தில் அழுக்கு அடைத்துக் கொள்கிறது. இது தான் பாலுண்ணி என்ற சதை வளர்ச்சியின் காரணம். பெருச்சாளி மாதிரி தோலைக்குடைந்து நாளத்தை வரவரப் பெரிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரச் செய்து விடுகிறது. பருவோ நோய்க்கிருமிகள் தாக்கிய சிறு வாயில். இந்தக் கிருமிகளை எதிர்த்துப் போராட நம் இரத்தத்தின் வெள்ளை உயிர் அணுக்கள் (Corpuscles) வந்து பருவில் கூடுகின்றன. எனவே, பருவை நகக்கலாகாது- நகக்கினால் இரத்தத்திலே விஷக்கிருமிகள் பரவி விடும். அவற்றை எதிர்க்க வந்த வெள்ளை இரத்த அணுக்கள் சிதறிப்போகும்.

தோல் செய்யும் வேலைகள் இவை. தண்ணீர், உப்பு முதலிய உலோகக் கழிவுகளை வெளியே தள்ளுகிறது. ஒருவகை எண்ணெயை உண்டுபண்ணி உடலின் மேல் பரப்பிப் பதப்படுத்துகிறது. மடிந்த உயிரணுக்களை ('செல்' களை) மேலே தள்ளி, அதற்குப் பதிலாக அடியில் புது உயிரணுக்களைப் பரப்பிக் கொண்டேயிருக்கிறது.

முன்னாள் சிகிச்சைகள் :

தோல் இந்த வேலைகளைச் செய்யவேண்டுமானால், அடைப்பில்லாமல் நன்றாய்த் திறந்த வழிகள் அதில் இருக்கவேண்டும். எண்ணெய் பாய, இந்த வழிகளை அழுக்கு அடைத்துக்கொள்ளக் கூடாது. விஷங்களும் கழிவுகளும் வெளியே வந்து கழுவி நீக்க வசதியிருக்கவேண்டும். தோலுக்கு மேலே வந்த செத்த உயிரணுப் படலம் சுலபமாக உரிந்து விழுந்து, அதன் இடத்தை அடியில் வளரும் புதிய ரோசா நிற உயிரணுக்கள் அடைய வாய்ப்பிருக்க வேண்டும். தோலுக்கு அழகூட்டும் உணவுகள் உள்ளேயிருந்து அதற்குக் கிடைக்கச் செய்யவேண்டும் நாம் இப்படி நடந்துகொண்டால், தோல் எப்பொழுதும் தோல் ரோஜா நிறத்தில் புதிதாகவே இருக்கும்.

இந்தியாவில் நம் முன்னோர்கள் தம் தோலில் ஏற்படும் குறைபாடுகளுக்குச் சிகிச்சையாக உள்ளுக்குத்தான் பெரும்பாலும் மருந்து சாப்பிடுவார்கள். வெளிப்பூச்சுச் சிகிச்சை குறைவு. ஆரோக்கியம் குறைந்த தோல் அழகுக்குப் பெருங்கேடு விளைக்கும் என்பது அவர்களுடைய கருத்து.

இந்தக் காலத்தில் பல இளம் பெண்கள் முகப்பருக்களை லட்சியம் செய்யாமல் நடமாடுவதைப் பார்க்கிறோம். இது ஆச்சரியமாக இருக்கிறது. இந்தக் குறையைப் போக்கிக்கொள்ள இவர்கள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. ஒருதடவை சினிமாப் படப்பிடிப்பு ஒன்றைப் பார்க்கப் போயிருந்தேன்; முக்கிய நடிகையின் முகத்தில் பருக்கள் நிறைய இருந்தன. இவற்றைச் செயற்கை முறையால் கூட மூடி மறைக்கவில்லை. இது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருக்களுக்கு முன்னுள் சிகிச்சைகளுள் ஒன்றில் வேப்பிலையை உபயோகிப்பார்கள். வேப்பிலையைக் கலுவத்தில் இட்டு இரும்பு உலக்கையால் இழைப்பார்கள். இழைக்கும்போதே சிறிது சிறிதாகத் தண்ணீர் விட்டுக் கொள்வார்கள். குழம்பாகும் வரை இப்படி இழைத்துக் குழம்பை வடிகட்டி இரசத்தை எடுத்துத் தினமும் இரண்டு கரண்டி முட்டை அளவு குடிப்பார்கள்.

இங்கிலாந்தில் ஸர் ஹ்யூ பிரைட் என்பவர் சீமாட்டிகளின் ஆனந்தம்' (Delight for ladies) என்று 1600-இல் ஒரு நூல் எழுதியிருக்கிருர். பிர்ச் (Birch) என்ற மரத்தின் பாலை எடுத்து வசந்த காலத்தில் பூசிக் கொண்டால் முகத்தின் குறைபாடுகள் நீங்கும் என்பது ஆங்கிலச் சீமாட்டிகளுக்கு இந்த நூலில் கண்ட யோசனை.

முதலாம் எலிஜபெத் ராணி ஒரு மருந்துக் குழம்பு தயாரித்து முகத்துக்குத் தடவி வந்தாள். ஓட்டோடு இரண்டு புதிய கோழி முட்டைகள், படிக்காரச் சாம்பல் (Burnt Alum), பொடித்த சர்க்கரை, வெண்காரம் (Borax), கசகசா விதைகள் இவற்றை ஒரு யந்திர உருளையின் கீழே ஓடும் அரைபைண்ட் நீரிலே மிக நுண்மையாய்க் கலந்து குழம்பாகும்படி அடித்து அதை அவள் உபயோகித்தான்.

தோலுக்கு அழகு தருவதில் இணையற்றது என்று பிரான்ஸில் பச்சை அன்னுசியின் சாறு, வெங்காயச் சாறு இந்த இரண்டில் ஒன்றை உபயோகித்து வந்தார்கள்.

தித்திப்புத் தின்ன வேண்டாம்:

நமது உடல்தோல் எண்ணெய்ப்பசை மிகுந்திருக்கும் போதுதான் பரு முதலியவை அடிக்கடி வெடிக்கின்றன. வெகு சுறுசுறுப்பாக எண்ணெய்ச் சுரப்பிகள் வேலை செய்தால், எண்ணெய்ப் பசை அளவுக்கு மேல் வேர்வைக் கால்களில் நிறைந்துவிடுகிறது. அப்போது அவற்றில் அழுக்குப் படிவதே பெரும்பாலும் பருக்கள் ஏற்படக் காரணம். இப்படி இந்தச் சுரப்பிகளில் அதிகப்படியான எண்ணெய் ஊறுவதற்குக் காரணம், நமது சாப்பாட்டில் உள்ள ஏதோ கோளாறுதான்; அளவுக்கு மேல் சாக்கொலேட்டும் தித்திப்புப் பண்டங்களும் சாப்பிட்டிருக்கலாம்.

உணவில் தித்திப்புப் பட்சணம், பணியாரம், பிட்டு, சோமாஸ், அரிசி மசாலா இவைகளையும் சர்க்கரையையும் குறைத்துக் கொள்ளுங்கள். எண்ணெயில் வறுத்த அல்லது பொரித்த உணவுகள் வேண்டாம். காய்கறிப் பச்சடிகள், சமைத்தோ சமைக்காமலோ பச்சைநிறக் காய்கறிகள் இவற்றை நிறையச் சாப்பிடுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்; முக்கியமாக முட்டைக் கோஸ், கேரட், வெங்காயம், காலிஃப்ளவர், தளிர்க்கீரைகள் இவை தக்க உணவுகள். ஒரு டம்ளர் கடு தண்ணீரில் புது எலுமிச்சம் பழ ரசத்தை விட்டுக் காலையில் எழுந்தவுடனும், இரவு படுக்கப் போகும்போதும் குடிக்கத் தவற வேண்டாம்.

தலையில் பொடுகு ஏற்படாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்; முகத்தில் பருக்களை உண்டாக்குவதில் பொடுகுக்குத் தொடர்பு அதிகம். தலைமயிரில் மிதமிஞ்சி எண்ணெய்ப் பசை இருந்து பொடுகு ஏற்பட்டால், முகப்பரு முதலிய தோல் வியாதிகள் தோன்றுவது நிச்சயம். நோய்க் கிருமிகள் வளர்ந்து பெருக இத்தகைய தலைமயிர் ஏற்ற இடமாகும். எண்ணெய்ப் பசை உள்ள முகப் பூச்சுக்களை உபயோகிக்கவே வேண்டாம். பரு, புள்ளி முதலிய தோல் வியாதி ஏற்படக் கூடிய பாகங்களை (முதுகு, பிடரி, மேல்மார்பு இன்னும் இந்த வியாதிகள் தோன்றக் கூடும்) கிருமிநாசினி ஸோப்பினால் நன்றாகக் கழுவுங்கள்.

வெந்நீரில் எப்ஸம் ஸால்ட்டைக் கரைத்து ஒத்தடம் கொடுத்தால், சாதாரணமாகச் சிறிய பருக்கள் பழுத்து உதிர்ந்துவிடும். ஆனால் அழுக்கடைப்பால் ஏற்படும் பால் உண்ணிகளைப் பக்குவமாகச் சிரமப்பட்டுத்தான் போக்க வேண்டும். வேர்வைக்கால்கள் திறந்து கொள்வதற்காக முகத்தில் ஆவி பிடியுங்கள். ஓர் அருக்கஞ் சட்டியில் ஆவி வரும் தண்ணீரை ஊற்றி அதற்கு மேலே முகத்தைக் காட்டியபடி தலையையும் அருக்கஞ் சட்டியையும் ஒரு துண்டினால் கூடாரம்போல் மூடிவிடுங்கள். ஆவி வரும் நீரை அதுக்கடி அருக்கஞ் சட்டியினால் கலந்து கொள்ளுங்கள். இந்த ஆவி படப்பட உங்கள் முக வேர்வைக்கால்கள் திறந்து கொள்வதை நீங்களே உணர்வீர்கள்.

பொறுக்கும் சூடான தண்ணீர், நிறைய ஸோப் நுரை இவற்றை உபயோகித்துப் பஞ்சு போல் மிருதுவான துணியால் முகத்தையும், கழுத்தையும் பிடித்து விட்டுக் கொள்வது போல் துடைத்துக் கொள்ளுங்கள். துடைக்கும்போது மேல் நோக்கியும் வெளி நோக்கியும் வட்டமாகக் கையைச் சுழற்றித் துடைத்துக் கொள்ளுங்கள். மூக்கு, மோவாய்க்கட்டை இவற்றைச் சுற்றி இன்னும் சில முறை இப்படித் துடைத்துக் கொள்ளுங்கள்; கண்களைச் சுற்றித் துடைக்கும் போது மட்டும். வெகு கவனமாகவும் லேசாகவும் துடைக்க வேண்டும். பிறகு முகத்தை இரண்டு முறை வெந்நீரிலும், இரண்டு முறை குளிர்ந்த நீரிலும் நன்றாகக் கழுவுங்கள். வேர்வைக்கால்களை அடைத்திருக்கும் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணெய், அழுக்கு, படிந்த உயிரணுக்கள் இவை எல்லாம் சுத்தமாக வெளியேறிவிடும். பிறகு ஒரு முகமூடி அணிந்து கொள்ளுங்கள்.

உலர்ந்த தோலை மிருதுவாக்க ஏதாவது எண்ணெய்ப் பசை தடவிப் பிடித்துவிட வேண்டும். பால் ஆடையைப் பதினைந்து நிமிஷம் வரையில் தோலின்மேல் வைத்து அழுத்தித் தேய்க்கவேண்டும். ஏதாவது பாலுண்ணி ஒன்று பிடிவாதமாக அசைய மறுத்தால் கொதிக்கும் வெந்நீரில் நனைத்த துணி ஒன்றினால் அந்தப் பாகத்தை நன்றாய் ஈரமாக்குங்கள். பிறகு கை விரல்களைப் பஞ்சால் மூடிக்கொண்டு தோலைப் பிதுக்கி அந்தப் பாலுண்ணியை வெளிப்படுத்துங்கள். இப்படிச் செய்து முடிந்ததும் கிருமிநாசினி மருந்தொன்றை அந்த இடத்தில் தடவத் தவறவேண்டாம்.

பரு முதலிய தோல் நோய்கள் கடுமையாக இருந்தால், தாமதம் செய்யாமல் டாக்டரைப் போய்ப் பாருங்கள். இல்லையானால் தழும்புகள் ஏற்பட இடம் உண்டாகிவிடும். உள் சுரப்பிகளின் சீர்கேட்டைச் சரிப்படுத்துவதாலும், சில வைட்டமின்களைச் சாப்பிடச் செய்வதாலும், பல வகை வெளிப்பூச்சு மருந்துகளாலும் டாக்டர் இவற்றைக் குணப்படுத்தி விடுவார்.

தொற்றும் காரணம்:

நம்மை அறியாமலே பரு முதலியவற்றைக் கிள்ளி விடுவது, நசுக்கிவிடுவது, முகத்துக்கு எண்ணெய்ப்பசைப் பூச்சுக்களை உபயோகிப்பது, தலைக்கு எண்ணெய் தடவுவது, நோயுற்ற பற்கள், அடிநாக்கு வளர்ச்சி, நிறைய வேர்த்துவிடுவது இவையெல்லாம் முக சம்பந்தமான தோல் நோய்கள் கடுமையாகிவிடக்கூடும்.

தோல் தொற்று நோய்கள் காரணமாகப் பருவும் பாலுண்ணியும் பரவாமல் இருக்கச் சில முக்கியமான விதிகளைப் பின்பற்றுவது நல்லது:

1. முகம் துடைக்க உபயோகிக்கும் துணியைத் தினம் ஒரு முறையாவது கொதிக்கும் வெந்நீரில் நனைத்துப் பிழியுங்கள்.

2. முகந் துடைக்கும் துண்டில் அழுக்கே இல்லாமல் இருக்கும்படி எச்சரிக்கையாக இருங்கள்.

3, முகத்துக்குப் பவுடர் போடப் 'பவுடர் பஃப்' என்ற புருஷுக்குப் பதிலாக ஒவ்வொரு தடவையும் சுத்தமான அழுக்கில்லாத கொஞ்சம் பஞ்சை உபயோகியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபப் பருவம் வரும் சமயத்தில், தோல்களில் எண்ணெய்ப்பசை சிறிது அதிகமாவதும், வேர்வைக் கால்கள் சிறிது விரிவதும் இயற்கை தான். ஆனால், லேசாக இராமல் இந்த மாறுதல்கள் தீவிரமாக ஏற்பட்டால், இவை நோய்களே; கவனிக்காமல் அலட்சியம் செய்வது மிகவும் தவறு. உங்கள் தோலின் ஆரோக்கிய நிலை உங்கள் தேக ஆரோக்கிய நிலையையே பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

— ஸண்டே ஸ்டாண்டெட்

நன்றி மஞ்சரி



# அடடா... பெரும் தவறு !

இலக்கணப் பண்டிதர் ஒருவர் இருந்தார். தம்முடைய இலக்கண அறிவைப்பற்றிப் பலருக்கு புளுகி அவருக்கு பெருமை காண்பதில் தாங்க முடியாத பெருமை வாழ்க்கையில் எவரும் பெற முடியாதவொன்றைத் தான் பெற்றுள்ளதாக அவர் மகிழ்ந்திருந்தார்.

ஒரு நாள் ஒரு படகில் ஏறி அமர்ந்தார். படகு கொஞ்ச தூரம் சென்ற பிறகு ''உனக்கு இலக்கணம் தெரியுமா?'' என்று படகோட்டியிடம் கேட்டார்.

''எனக்குத் தெரியாது'' என்று படகோட்டி கூறினான்.

''அடடா! பெரிய தவறு செய்துவிட்டாய். உன் ஆயுளில் பாதியை வீணாக்கி விட்டாயே'' என்று அனுதாபப்பட்டார்.

படகு ஆற்றின் நடுவே சென்றபோது திடீரென்று புயல் வீசியது: பலமான நீர்ச்சுழிகள் தோன்றி படகைத் தத்தளிக்கச் செய்தது. அப்போது இலக்கணப் பண்டிதரை நோக்கி உரத்த குரலில் படகோட்டி கேட்டான் ''பண்டிதரே உங்களுக்கு நீந்தத் தெரியுமா? '' தெரியாதே '' என்று பரிதாபகமாகக் கூறினார் பண்டிதர்.

''அப்படியா'' பெருந் தவறு செய்து விட்டீர்கள். உங்கள் முழு ஆயுளையும் அல்லவா வீணாக்கிவிட்டீர்கள். இதோ படகு மூழ்கப் போகின்றது என்று கூறி ஆற்றில் குதித்து நீந்த முற்பட்டான் படகோட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

**BENARES SILK STORE**

159, K. K. S. ROAD
JAFFNA

T'Grams: Silk

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

**பெனரிஸ் சில்க் ஸ்டோர்**

159, கே. கே. எஸ். றேட்
யாழ்ப்பாணம்

தந்தி : சில்க்

ADVERTISEMENT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சம் நில்லுங்கள் !

அறிவை நாடுவோர் செங்கதிரின் துணை நாடல் இயல்பு. உடல் நலன் இருப்பின்தான் எதையும் நாடலாம். உடல் நலனுக்கு முக்கியமாகப் பற்களே மூலகாரணம். ''எங்கள் பல்பொடி'' பாவிப்போர் தமது உடல் நலனை எப்படி வைத்துள்ளனர் என்பது எமக்குக் கிடைக்கும் சான்றுகளிலிருந்து தெரியவரும். கல்லூரி மாணவர்களிடையே எமது ''எங்கள் பல்பொடி'' யும் அண்ணாசாமி தொழிலக தயாரிப்பான சத்துள்ள இனிப்பு வகைகளும் பெற்றுள்ள மதிப்பை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தன்னிகரற்ற தயாரிப்புகளை அளிப்பவர்கள் அண்ணாசாமி தொழிலகத்தினர். சிறந்த நூலாகிய ''செங்கதி''ரை நாடும் நீங்களும் சிறந்த தயாரிப்பான அண்ணாசாமி தயாரிப்புகளை நாடுவீர்கள் என்பது எமது நம்பிக்கை.

எமது முகவரி :

## அண்ணாசாமி தொழிலகம்

43, சினிவாசகம் வழி

யாழ்ப்பாணம்

ADVERTISEMENT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேட்டியிலும் போட்டி?

[இம்முறை திருமதி ரெறி ஜோயிஸ் கந்தாய் என்ற கென்னியா (Kenya) தேசத்துப் பிரமுகர் ஒருவரை நாம் அறிமுகப்படுத்துகின்றோம்.]

பொன்னம்பலம் :

''வணக்கம் ரெறி''

ரெறி : ''வணக்கம் பொனம்''

பொன் ''நான் முன் குறிப்பிட்டது உங்களுக்கு ஞாபகமாக விருக்கலாம். எமது முயற்சிகளில் ஒன்றாகிய செங்கதிருக்கு ஒரு பேட்டி தர வேண்டும் என்று கேட்டிருந்தேனே''

''ஆமாம் பொனம் நிச்சயமாக நான் நீங்கள் எப்பொழுது அழைப்பீர்கள் என்று எதிர்பார்த்திருந்தேன். பேட்டி தருவதற்காக மட்டுமல்ல. உங்களுடன் இலங்கையைப் பற்றி கலந்துரையாட வேண்டும் என்றும் ஆவல்''

''மகிழ்ச்சி நாம் இன்னுமொரு சமயம் எமது இலங்கையைப் பற்றி ஆறுதலாகப் பேசிக் கொள்வோமே.''

''அன்று அவையில் நீங்கள் அளித்த சொற்பொழிவில் மிக அழகாக உங்கள் அநுபவங்களையும் இலங்கையின் எழில்களைப் பற்றியும் சிறப்புற புகுத்தியிருந்தீர்களே அதனைக் கேட்டதும் இலங்கையை நானும் ஒரு சமயம் பார்க்க வேண்டும் போலாகி விட்டது''



Terry Joyce Kantai

''மிக்க மகிழ்ச்சி, நாம் என்றும் உங்களை வரவேற்க ஆயத்தமாக இருக்கின்றோம் நீங்கள் மட்டுமல்ல உங்கள் குடும்பமே இலங்கைக்கு வர ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா?''

''அது எப்படிச் சொல்ல முடியும்?''

முயற்சி செய்யுங்கள் வெற்றி காணலாம். அது சரி என்னுடைய முழுப் பெயரையும் உச்சரிக்கக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்டம் என்று சொன்னீர்கள். சரி நீங்கள் என்னை ' பொன்னு'' என்று அழைக்கலாம் என்றேன். ஆனால் நீங்கள் அதனை ''பொனம்'' என்று ஆக்கி விட்டீர்களே. அநேகமாக மற்றவர்களும் அதனையே பயன் படுத்த முனைகிறார்களே. இந்தப் பொனம் என்ற பெயரில் ஏதாவது உங்க நாட்டுப் பெயர் பொருத்தம் இருக்குமோ எனச் சந்தேகிக்கின்றேன். இதற்கு என்ன கூறுகிறீர்கள்?''

''அப்பப்பா உங்களின் முழுப் பெயரைப் பற்றிக் கேட்க வேண்டாம். அப்படியழைக்க நான் எத்தனித்தேனுகில் அது பெயர்க் கொலையாகி விடும். ஆனால் ''பொன்னு'' என்ற பெயர் குறுகியதாக இருந்த பொழுதிலும், அதனை நாம் பயன்படுத்தும் பொழுது அது உங்களை மரியாதையில்லாமல் விளிப்பது போல் இருக்கின்றது. ' It appears as if it Sounds rude'' ஆகவே அப்படியே ''பொனம்'' என்று அதனை ஆக்கிவிட்டோம். சொல்லும் பொழுதும் நன்றாகப் படுகின்றது.

உங்களுக்கு ஆட்சேபனையென்றால் ''

'' இல்லை, ஆட்சேபனையில்லை, ஆனால் இதற்கு என்ன காரணம் என்று அறியத்தான் விரும்பினேன். உங்கள் இஷ்டப்படி அழைத்துக் கொள்ளலாம். ஆனால் என்னைத்தான் கூப்பிடுகிறீர்கள் என்றளவிலாவது என் பெயரில் சில பகுதிகளாவது அதில் இருக்க வேண்டும்'' என்று கூறியவுடன் சிரித்தேவிட்டார் ரெறி,

'' உங்களைப்பற்றிச் சில வரிகள் எமது வாசகர்களுக்குத் தரமுடியுமா?''

'' என்னைப் பற்றி என்றால் எனக்கு முழுதாக புரியவில்லையே விளக்கமாகக் கேளுங்கள் '' பொனம் '' என்று குறும்புடன் சிரித்தார்.

'' உங்களைப் பற்றி '' என்று நான் குறிப்பிட்ட பொழுது உங்களின் தொழில் முறைகள் அநுபவங்கள், படிப்பு ஆராய்ச்சி அதனையிட்டே பொருள் கொண்டேன். நீங்கள் சொன்ன கூற்றை ஒத்துக் கொள்கின்றேன். நீங்கள் ஒரு பெண் என்பதினால் பல விபரங்கள் இருக்கலாம். விருப்பமானால்

'' வேண்டாம் வேண்டாம் நான் ஒரு கதைக்காகச் சொன்னேன் ''

'' ரெறி உங்கள் கதைக்கு மறு கதைதான் என் பேச்சும் ''

'' சரி! பொனம் என்னைப் பற்றிக் கூறுகிறேனே.

நான் சமூகசேவைப் பகுதியில் நீண்ட காலப் பிரியங் கொண்டவள். அதன் விளைவாக சமூகவியலில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளேன். 9 வருடமாக எனக்கு சமூக சேவைப் பகுதியில் வெவ்வேறு பிரிவில் வேலை செய்த அநுபவம் உண்டு தற்பொழுது மாகாண ரீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் சமூக சேவை மேற்பார்வை யாளராகக் கடமையாற்றுகின்றேன். எனது அயராத உழைப்பின் காரணமாக முன்னேறி இன்று உங்களை பல்லாயிரக் கணக்கான மைல்களுக் கப்பால் பிலிப்பைன்ஸ் நகரில் சந்திக்கின்றேனே அதனை யிட்டு மிகவும் பெருமைப்படுகின்றேன்.

"அது சரி உங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்லவில்லையே"

"செங்காதர் வாசகர்களுக்கு அதுவும் சொல்ல வேண்டுமா?"

"செங்காதர்" இல்லை ச் "செங்கதிர்" உச்சரிப்பை சொல்லிக் கொடுத்தபடியே உங்கள் விருப்பம் உங்களுடன் பழகிய நாள் முதல் உங்களுடைய சாதுரிய பேச்சையும், துடுதுடுப்பையும் கண்டு மெச்சியவர்களுள் நானும் ஒருவன். என்னையே திணற வைக்கிறீர்களே"

"ஆமாம் எனக்குக் குறும்பாகக் கதைத்துப் பேசுவதில நல்ல விருப்பம் அப்படியே என் பேட்டியும் அமைய வேண்டும் பொனம்"

"சரி கதையை மாற்றுமல் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்கள்"

"மணமாகியவள் இரண்டு குழந்தைகள், நீக்கள் மனைவியை விட்டு ஏங்குவது போல் கணவனையும் பிள்ளைகளையும் விட்டுச் சில காலம் ஏங்குகின்றேன்."

"யார் சொன்னது நான் மனைவியை விட்டு ஏங்குகின்றேன என்று தயவு செய்து அந்தக் கூற்றை வாபஸ்செய்யுங்கள்" என்றேன் கிண்டலாக

நீங்கள் சொல்லத் தேவையில்லையே இதோ உங்கள் மேசையில் இருக்கும் புகைப்படம் முழுக் கதையும் சொல்கின்றதே இது உங்கள் மனைவியல்லவா? (படத்தைச் சுட்டிக் காட்டியபடியே)
"ஆமாம்"

(மனதார அவரின் மூளை திறனை மெச்சுக்கொள்கின்றேன்)

"பிலிப்பைன்ஸ் தேசம் உங்களுக்குப் பிடித்துக்கொண்டதா?"

"மிகவும் பிடித்துக்கொண்டது"

நாடு திரும்பியதும் என்ன செய்வதாக உத்தேசம்?

"பழையபடி நான் சமூக சேவைப் பகுதியில் ஏராளமான திருத்தஞ் செய்யலாம் என இருக்கின்றேன்"

"அதற்கான வசதிகள் உங்கள் நாட்டில் உண்டா?"

"நிறையவுண்டு ஆனுல் வழி வகுப்பார் இல்லை."

"உங்கள் நாட்டின் தேயிலை உற்பத்தி எப்படி?"

"இன்று உங்கள் இலங்கைத் தேயிலையுடன் போட்டி போடுகிறேமே அது போதாதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போட்டியை விடுங்கள் — உருசி எப்படி? நான் இலங்கையிலிருந்தும், வெளிநாடுகளில் தான் சுவையான தேநீர் அருந்துகின்றேன். அதாவது எமது சந்தைகளில் கழிவு தேயிலைதான் தரப்படும் மற்றெல்லாம் ஏற்றுமதிக்கு! இங்கும் அதே நிலைதானே?"

"ஏற்றுமதி ஒருபுறம், மக்கள் ஓரளவு தரமான தேயிலை பெற முடியுமே"

"அப்படியா, தப்பிவிட்டீர்கள்"

"சரி செங்கதிர் வாசகர்களுக்கு ஏதேனும் செய்தி தர விரும்புகிறீர்களா?

செங்கதிர் வாசகர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுங்கள். மற்றும் செங்கதிருக்கு என்னால் ஏதாவது உதவியாக இருக்கும் என்றால் அதனையிட்டு நான் பெருமை கொள்வேன். ஒரேயொரு குறை. எனக்கு உங்கள் மொழி தெரியாதது. உங்கள் போன்றவரின் ஆர்வத்தில் உருவாகும் நூல்கள் எவ்வாறு இருக்கும் என்பதை உணர்ந்து அதனைச் சுவைக்க முடியாதே என்ற ஏக்கம் எனக்கு இருக்கிறது, ஆனாலும் அதன் வளர்ச்சிக்கு என் வாழ்த்து.

"நன்றி ரெறி"

"மிக்க நன்றி பொனம்"

---

## தொ
## எ டை
## வி

எப்படியென்று விழிக்கின்றீர்களா ?

இதோ ! ஆண்களாயின் உங்கள் தொடையெனும் பின் நீளத்துடன் 1.88 மடங்குடன் 813.06 மிலிமீட்டர் கூட்டவும். பெண்களாயின் 1.945 மடங்குடன் 72.844 கூட்டவும்.

*ஆதாரம் : வில்டன் மாறியோன் குறெக்மான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாகரத்து விவகாரங்கள்

[ அமெரிக்காவில் விவாகரத்து வழக்குகளில் விவாகரத்துக்காகக் கோரப்படும் காரணங்களில் சில " துகள்கள் " ]

✱ கண்ணாடி காட்டும் காட்சி

1. விவாகமாகி 6 மாதங்களானதும் மூக்குக் கண்ணாடியை நான் மாற்றவேண்டி வந்தது. இதனை நான் அணிந்ததும் அதனூடாக என் மனைவியை பார்க்கும் பொழுது அவள் அழகியாகத் தெரியவில்லை. ஆகவே விவாகரத்து அளிக்கக் கோருகின்றேன்.

✱ 1 சென்ட் பெற்

2. என் கணவர் தன் நண்பர்களுடன் சீட்டாடும் பொழுது ஒவ்வொரு ஆட்டத்திற்கும் பந்தயமாக வைக்கின்றார். ஆனால் என்னோடு ஆடும்பொழுது 1 சென்ட் தான் " பெட் " டாகத் தருகிறார். இதனை என்னால் சகிக்க முடியாது.

✱ நாயுடன் நேரம் செலவு

3. கணவர் அலுவலகத்திலிருந்து வந்ததும் எம் வளர்ப்பு நாயுடன் அதிக நேரம் செலவழிக்கின்றார். இது சரியா? ஆகவே எனக்கு இக் கணவர் தேவையில்லை

✱ கலகலப்பு வேண்டும்......

4. என் கணவர் என் சிநேகிதிகளுடன் கலகலப்பாகப் பேசி பழகமாட்டேன் என்கிறார் இதனை என்னால் சகிக்கமுடியாதே.

✱ ...வேண்டாம்

5. என் கணவர் என் சிநேகிதிகளைக் கண்டாலே மிக ஆர்வத்துடன் பேசிக் கலகலப்பாக இருக்கிறாரே. தனியே "உம்" மென்றிருப்பார், இதனை என்னால் பொறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பூச் சிக்கல்

6. எனக்கு சிவப்பு மலர்களில் நாட்டம் அதிகம் மனைவிக்கோ மஞ்சள் பைத்தியம். மலர்களை வாங்கும் ஒவ்வொரு தினமும் குறைந்தது 5 தடவைகளாவது சண்டை போட்டுக்கொள்கிறோமே. ஆகவே விவாகரத்துக் கோருகிறோம்.

★ 2 மணி பிரிவு

7. என் கணவரும் நானும் ஒரே ஆபிசில் வேலை செய்கிறோம். இருந்தும் அவர் வீட்டைவிட்டு எனக்கு 1 மணி நேரம் முன்தாகவே கிளம்பி வரும்பொழுதும் 1 மணி நேரம் தாமதித்தே வருகின்றார். இதனால் நான் என் அன்புக் கணவரை 2 மணி நேரம் பிரியவேண்டியுள்ளது. இப் பிரிவினைத் தாங்க முடியவில்லை,

★ அவரே இவர்

8. 7 தடவை விவாகரத்துக் கோரி இக் கோட்டிற்கு வந்துள்ளேன். இப்பொழுது 8-வது தடவை கோட்டில் வந்து நிற்கக் காரணம் இவரை மணம் புரிந்த 8-ம் நாள் தெரியவந்தது. அதாவது எவரை நான் 3-வது தடவை ஒதுக்கினேனோ அவரேதான் இவர் என்பது புரிந்தது.

★ மகளை நேசிக்கிறரே!

9. என் மகளைவிட மகனில் அவர் அக்கறைகாட்டி மகளைவே கூட நேசிக்கிருரே இதை நான் வெறுக்கின்றேன்.

தொகுப்பு: ஏடுருவி

## பிரியம்தான் ஆனால் புரியாதே

எனக்கு எப்போதும் பிரியமுள்ளவை ஆனல் புரியாதவை மூன்று — ஓவியம், சங்கீதம், பெண்.

— ஃபான்டானெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் மூன்று ரூபா கேட்பான் சார். நீங்கள் இதிலே ஏறிடுங்கோ" என்று என் பதிலை எதிர்பாராமலே விமான நிலைய போர்ட்டிக்கோவில் ஆயத்தமாக இருந்த ஓர் இந்தியாவின் சொந்த தயாரிப்பில் வெளிவரும் "அம்பாசாடர்" காரில் என் பொருட்களைக் வைத்தான். அதனைத் தூக்கி வந்த விமான பணியாளர் "ஸார் அசோக்பவனு அல்லது" என்று இழுத்தான் வாடகைக் கார்ச்சாரதி "திருச்சி ஜங்சனுக்குப் போவோம் முதலில்"...... பதிலளித்தேன்.

ஸாருக்கு எந்த உதவி வேணுமானாலும் நாங்கள் செய்து கொடுப்போம்; "ஸாருக்கு நம் நாடு முதற் பயணமாக்கும்" என்றான்.

'சாமான் சக்கட்டு ஏதாவது விற்கக்கொண்டு வந்தீர்களா? தேங்காய் எண்ணெய் சோப்புக் கொண்டு வந்தால் நாங்களே வேண்டிக் கொள்ளுவோம். சார் அலைய வேண்டியதில்லை. என்றே அடுக்கிக்கொண்டே போனார்கள்.

நான் ஒன்றும் எடுத்துப் போகாததால் அவர்களுக்கு ஏமாற்றந்தான் இருந்த போதிலும் அவர்களுக்குச் சந்தேகம் விடுபட்டதாயில்லை. "சார் சென்னையில் இந்த விலை போகாது சார். அங்கு வாங்கமாட்டார்கள்,



பொற்கதிர்

இங்கே கொடுத்துடுங்க உங்களுக்குச்சாதகம் அவர்கள் நினைத்தது என்ன வென்று என்னால் ஊகிக்கமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் உள்ள பொருட்களைக் கைவிடாது இருக்கிறேன் என்பது அவர்கள் முடிபு. சகலவிதமான பேச்சுக்களும் என் பதிலைப் பசராமலே இடம் பெறுகின்றது. அதே சமயம் அவசர அவசரமாக இன்னும் இரு பிரயாணிகள் சாதுரியமாக நம்மையடைகின்றனர். அதே விமான நிலையப்பணியாளே " ஏஜண்ட் "

இப்போதுதான் எனக்குப் புரிந்தது என்னுடன் கதை கொடுத்து வந்த காரணம் அதாவது இன்னும் சில பிரயாணிகள் சேரும் வரை அதாவது Customs ஆல் " ரிலீஸ்ட் " ஆகும் வரை எனக்கு அலுப்புத் தட்டாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

பழையபடி அதே விமானப் பணியாள்,

சார் உங்க " பாக் " எல்லாம் சரிபார்த்திடுங்கோ அங்காலே இங்காலே திரும்புவதற்கிலே யாராவது அப்பிக் கொண்டு போடுவாங்க "

" போடா - நீ உன்பாட்டுக்கு உன் வேலையைச் செஞ்சுடு இங்கு அவங்களைப் என்ன பயமுறுத்துகிறாய், நமது நாட்டிற்கு வந்திறங்குறாங்கள் அதுக்குள்ளே கதையளக்கிறாய் " சீறுகிறார் டாக்சி டிறைவர்.

" ஆமா உங்களுக்கு ஆறு சேர்ந்துடுத்து இனி உங்கபாடு தானே எனக்குத் தெரியும் தானே. சார் வெளிநாடு செல்கின்றார் ஓரிரண்டு நாள்தான் எங்க ஊரிலே நிற்கப் போகின்றார் அதாலேதான் சொன்னேன் நீ வாய் மூடு " கத்துகிறான் பணியாள்.

இவற்றைக் கேட்கும்போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது ஆனாலும் இதற்குள் சில கருத்துக்கள் பரிமாறுப்படுவதை உணர்கிறேன். அதே சமயம் இவர்கள் சண்டை வழக்கமான ஏற்பாடுகளில் ஒன்று என்று எனக்குணர்வாகின்றது. அச்சமயம் " நாங்கள் கிளம்பலாமா ?" டிறைவர் " சாமான்களைச் சரிபார்த்திடுங்கோ ' மற்ற ஒரு குரல்.

" நான் முன் சீட்டில் அமர்ந்திருந்தேன்." மற்றைய நண்பர்கள் பின் சீட்டில் இருந்தார்கள். அவர்களும் " முழிகளும் " வியப்பில் ஆழ்ந்திருந்ததை அவதானித்தேன். ஆனால் அவர்கள் பேச்சு மூச்சின்றி இருந்தனர். பேச்சைக் கொடுத்தேன்."

" உங்கள் சாமான்கள் சரியா "

பெரிய புன்னகையுடன் இருவரும் போட்டா போட்டியுடன் தலையசைத்தார்கள்.

" ஏன் தாமதம் போகலாமா " டிறைவரை நோக்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்க றெடிங்க"

"முதலில் அவங்களை அப்புறப்படுத்துங்க சார் அவங்கட தொல்லே என்று முணுமுணுக்கிருர்.

நான் திரும்பி யாரை என வினவுகின்றேன், நான் திரும்பவும் என் முன்னே "சார்" சாளரத்தினூடாக பெரிதாக ஒரு "சலாம்" அடித்தான் அந்த விமான நிலேயப் பணியாளன்.

அப்போது பின் சீட்டில் இருந்தவர்கள் ஆளுக்கொரு ரூபாவை நீட்டினுர்கள். நானும் ஒரு ரூபாவை நீட்டினேன். "உங்கள் கடமைகளில் ஒன்று" ஆனல் எனது விருப்பத்திற்கிணங்க இந்த நோட்டு பரவாயில்லே வைத்துக்கொள் என்றேன்.

விமானப் பணியாட்களுக்கு இக்கூலி பொதுவாகக் கொடுக்கவேண்டியதில்லே. அவர்கள் விமான நிலேயத்தில் பயணிகளே நன்ருய் பயன்படுத்துவது வழக்கம்.

"ஆமாங்க சார் - தரித்திரம் பிடிச்சவங்க - மனிசன் வெளிக்கிட காலுக்கடைப் பாங்க தள்ளடா அங்காலே நாங்க போறேல்லேயா"

இவர்களுடைய கருத்து மிக்க, இணைந்த முயற்சியை எண்ணி மனதினுள் சிரித்தபடி தலேயைக் குனிந்து கொண்டேன். டிறைவர் அதனே யூகித்துக் கொண்டே காரைக் இளப்பிய வண்ணம் "என்ன சார் செய்வது? எம்முடைய தொழில் இது தான்; ஆளுக்காள் நாங்க உதவியாக இருக்கத் தானே வேண்டுமுங்க" என்றதும் நான் வாய் விட்டே சிரித்துவிட்டேன்.

"சார்" நீங்க இங்கே முதலே கால் வைக்கிறீங்க அப்படியிருந்தும் உசாரா கவே இருக்கிறீங்களே என்ருன். "சரி சரி நீ இவ்விடங்களேப் பற்றி சிறிது சொல்லேன் எனக்கு புதுவிடமல்லவா? என்றேன்.

என்ன சார் நீங்க உங்க கண்ணுலேயே பார்க்கிறீங்களே பரந்த வெளி வயல் வெளி இது ஒரு இடமா? நீங்கள் ஹொட்டலுக்கும் போய் குளிந்துக்கிட்டு புறுகிருமாகத் தாருங்கா 30 ரூபாய் கொடுங்க அப்படியே நல்ல இடமாக எல்லாம் காட்டி விட்டுடுவேன்

"போயும் போயும் உன்னேக் கேட்டேன்" என்று என் வாய் முணுமுணுக்கின்றது.

திருச்சிராப்பள்ளி விமான நிலேயத்தைத் தாண்டியதும் கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் வயல் வெளியாகவே காட்சி தரும். பனே மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன, இளஞ் சிவப்பு மண்ணுகத் தரை காட்சியளிக்கின்றது. சாலைகள் நேராகவும் வாகன ஓட்டங்கள் குறைந்ததாகவும் இருக்கின்றது சில சாலை ஓரங்கள் வயிற்றைக் குமட்டக்கூடிய நாற்றங்கள் மிகக்கொண்டுள்ளதாகவேயிருக்கின்றன. இதனை யிட்டு தமிழ் நாட்டு அரசு கவலைகொள்ளாதது ஏனோ? மனிதனின் பிற்போக்குச் சக்திகள் எத்த நாட்டிலும் உண்டு என்பதை இங்கு நான் உணர்கிறேன்.

சுமார் இருபது நிமிடங்களில் வாடகைக்கார் திருச்சியை அடைகிறது, கார் நின்றதும் கூலிகளின் அமளி துமளி ஒரு பக்கம். கேட்டுக் கேள்வியில்லாமல் காரினுள் இருந்து சாமான்களை டிரைவருடன் சேர்ந்து இறக்குகின்றார்கள்.

கூலிகளும் வழிகாட்டிகளும் சிலசில பைகளைக் கையில் ஏந்தியபடி சொந்தம் கொண்டாடுகிறார்கள். அதாவது தமக்குள்ளே 'புக்கிங்' செய்கிறார்கள்.

எனக்கு உண்மையிலேயே ஏக்கம் கண்டது. காரணம் சில தூரத்துக்கு அப்பால் எனது சூட்கேசு ஒரு கூலியாளிடம் தஞ்சமாகி யிருந்தது. எனக்கு அருகில் உள்ள ஒரு குண்டனிடம் மற்றவை தஞ்சமாகியிருந்திருந்தன. அதனை எடுக்கப் போகக இவன் மாறிவிட்டால் என்ன செய்வது. இவனுடன் நான் நிற்க அந்தப் பை தன்பாட்டில் போய் விடுமோ என மனம் ஏங்குகின்றது. இப்பொழுது அந்த விமான நிலையப் பணியாள் கத்திலது பேரிரைச்சலாகக் கேட்கின்றது. என் காதில் இதற்கிடையில் விமான நிலையத்திலிருந்துமற்றைய கார்களும் வந்து சேர்கின்றன.

இதே ஆரவாரம்; பிரயாணிகள் தடுமாறுகின்றனர். டிரைவர்கள் பெரிய சாதனை புரிந்தவர் போல தோற்றமடுகின்றனர். சுமார் 10 கூலியாட்களுடன் பிரயாணச் சாமான்கள் அகப்பட்டுக்கொள்கிறது. சுமார் 40 – 50 சனம் திருச்சி விமான ஆபீசுக்கு முன்னுல் கூடுகின்றது. இலங்கை விமான நிலைய அலுவலகமும், இன்டியன் ஏயர்லையின்சும் அருகருகே அசோக்பவான் கட்டடத்தில் காணப்படுகின்றது. பஸ் நிலையமும் கிழக்கு முகமாக சமீபத்தில் காட்சியளிக்கின்றது.

நமது டிரைவரும் ஆரவாரத்தில் ஆழ்ந்து கொள்கின்றார்.

எனக்கு விநாடிக்கு விநாடி கோபம் ஓங்குகின்றது. பிரயாணக் களைப்பு மனச் சஞ்சலமும் ஒன்ருகச்சேர நமக்கு அருகில் பிரயாணப் பைகளுக்குக் காவலாக இருந்த குண்டன் பக்கம் திரும்பியது. அதே சமயம் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தூரத்தில் எனது மற்றைய பையை அடிக்கடி பார்த்து உறுதி செய்து கொள்வதில் என் கண்கள் மிக வேகமாக வேலை செய்து கொண்டிருந்தன.

"என்னுடைய மற்றைய பாக் அதோ இருக்கின்றது கொண்டுவாவன்"

கத்துகிறேன் நான்.

"ஸார்" விழிக்கின்ருன். என்று அதே வசனத்தைத் திருப்பவும் கத்தினேன்.

"ஸார்" அது எப்படி அங்கு போச்சுது? கேட்கிருன் அவன்.

எனக்கு வந்த கோபத்தில் உடலே நடுங்கியது.

"யாரைக் கேட்கிருய்" உந்த பைகள் உன்னிடம் எப்படி வந்தது? என்றேன் நான்.

"ஏன் சார் என்னேட கோபிக்கிறீர்கள். உங்க பாக் ஏதேன் தவறுதா?

நான் தமிழில்தானே சொன்னேன். என்னுடைய பைகளில் ஒன்று உன்னுடைய கூட்டாளியிடம் போய்விட்டதே. அதனை எடுத்து வந்து இதோடு சேர்த்துக் கொள்ளேன்.

"அது எப்படி ஸார் முடியும். நான் இங்கு இதனை விட்டுவிட்டுப் போக வேறு யாரேன் தங்கபாட்டுக்கு இதனைக் கிளப்பிக்கிட்டுப் போகப் போருன்."

உனக்கு நான் சொல்வது புரியலையே. இது என்னுடைய பைகள். நான் நிற்கிறேன். வேறு யார் தூக்குவது. என்னுடைய "பாக்" எடுத்துவா - அப்பாடா ஒருவாறு அசைந்தான். என்ன கஸ்டம்? இவன் அசைய நமது இரண்டாவது நபர் தனது பைகளை விட்டுச் சற்றே விலகி நிற்கின்ருன், நமது குண்டன் அதனை யணுகி எனது பையைக் குறிப்பாகத் தூக்குகின்ருன்.

"டோய்" என்னடா நமது வியாபாரத்திலே குறுக்கிடுகிருய் என்று ஒரு குரல் எதிரொலிக்கின்றது. இவனும் ஏதோ கையசைத்துக் காலசைத்துக் கூறுவது எனக்குக் கேட்கிறது. அதேசமயம் பணிவான ஒரு குரல்

'சார் காருக்கு' என்கிறது. ஆமாம் டிரைவர் ஏதோ தேரை இப்பொழுதுதான் இருப்பிடத்திற்குக் கொண்டுவந்து விட்டுவிட்டு வந்தவர் போல் நின்ருர். வந்த கோபத்தை ஒருவாறு அடக்கியவாறு அது சரி என்ன இப்பொழுது இங்கு நடக்குது என்றேன். "ஏன்சார் உங்கள் பைகள் எல்லாம் சரிதானே"

'இப்பொழுது தான் கேட்கின்ருய்" என்று நான் அலுக்கவும், எனது பை குண்டனுடன் என்னைச் சேரவும் சரியாயிருந்தது.

சரி சரி எவ்வளவு?

"மூன்று ருபாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ நீங்கள் விமான நிலையத்தில் கூறியது என்ன? மற்றவன் 3 ரூபாய் கேட்பான் என்றீர்களே, என்று சொல்லிக் கொண்டே மூன்று ரூபாயை எடுத்தேன்,

"ஸார் ஸார் நீங்கள் இஷ்டப்படி கொடுத்திடுங்கோ — இரண்டு ரூபாய் தாருங்கோ"

"பரவாயில்லை வைத்துக் கொள்"

மூன்று ரூபாயை நீட்டினேன். உங்கள் சுட்டிக் காட்டினேன் அவ்வளவுதான் என்றேன்.

"ஸார்! நீங்கள் எம்மைப் பற்றி யோசிக்காதேங்கோ. நாங்க மிக்க நாணயமாய் உழைப்போமுங்க. உங்களை ஹோட்டலில் சேர்க்கும்வரை எமது பொறுப்பு, எமது பழக்கம் அப்படியாகிவிட்டது ஆனாலும், எமது பிரயாணிகளுக்கு இடைஞ்சலாக ஏதேனும் நடந்ததா என இந்த ஏயர் லைன்சைக் கேட்டுப் பாருங்கோ"

நானும் அவனது கருத்தை ஏற்றவாறு ஜுண்டலை நோக்கினேன். அவனும் குறிப்புணர்ந்து பைகளைத் தூக்கி முன்னே செல்கின்றான். நான் தொடர்கின்றேன். "கல்பனா" வில் இடம் பார்ப்போம் என்றேன். சுமார் 20 யார் தூரத்தில் தான் கல்பனா ஹொட்டல் அமைந்திருந்தது.

# 4

சில சிரமத்துடன் கல்பனாவில் இடம் கிடைக்கின்றது.

ஆமாம் 12-ம் இலக்க தனி அறையில் சற்றே ஆறுவோம் என நான் ஆயத்தஞ் செய்யவும் கதவில்யாரோ தட்டவும் அலுப்புடன் கோட்டைக் கழட்டிய வாறு அறைக் கதவைத் திறந்தேன்,

"என்ன ஸார் இன்னும் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லையா? என்று ஏதோ பல மணி நேரம் களித்து வந்தவன் மாதிரி குசலம் விசாரித்தது வேறு யாரும் அல்ல என்னை கொணர்ந்துசேர்த்த வாடகைக் கார் டிரைவர்.


வந்தவங்களை சற்றே ஓய்வு எடுக்க விடமாட்டீங்களா, ஒரு யோசனையும் மில்லாதவங்க என்று முணுமுணுத்தபடி உள்ளே கம்பீரமாக நுழைந்தான் எனது அறைக்கு ஆஜராகியிருந்த வெயிட்டர் அறைகள் எவ்வளவு அழகாக வைத்திருக்கப்பட்டதோ அதேபோல் புனிதமான வெளுத்து மினுக்கிய வெள்ளையுடையுடன் தோன்றி இவ்வாறு தொடர்ந்தான்.

சார் இவங்களை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்; இதோ உங்களுக்கு குடிக்கத் தண்ணீர் இக் கூசாவில் வைக்கின்றேன் சாப்பிட ஹாலுக்கு வர்றீங்களா? அல்லது ரூமுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்பனா ஹோட்டல் முன் ஆசிரியரும் அவரது இந்திய நண்பர் திரு. குப்தாவும்



கொணரட்டா? என்று கேட்டபடி டிரைவர் பக்கம் திரும்பி என்னய்யா? இப்பத்தான் புதிசா வியாபாரஞ் செஞ்சிறியா? பேந்து வா அண்ணே. ஸார் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கட்டும், சாப்பிட விடமாட்டீங்களாக்கும்! எனச் சீறினன்.

'அப்ப சார் 2 மணிக்கு வரட்டுமா' என்று கேட்டபடி பின்வாங்கினன் டிரைவர். "ஆகட்டும்" என்ற பாணியில் நான் தலையசைக்கவும் இன்னுமொரு குரல்.

"அட போண்ணே" போயிட்டு வாவன் சரியா 2 மணிக்கு வந்திடு அப்புறம் நாங்க எங்கபாட்டுக்கு ஊர் பார்க்கக் கிளம்பிவிடுவோம்" என்று உரிமைக் குரல் எழுப்பியது வேறுயாருமல்ல என்னை கூட்டிவந்த குண்டனே. "அவன் கைகளில் மூன்று சிவந்த பெரிய ஆப்பிள் பழம் இருந்து என்னைப் பார்த்து "முழித்தது" இதற்குள் வெயிட்டர் வெளியேறுகையில் சிறந்த வெளிநாட்டு ஹோட்டல்களில் சில கதைகளில் காணப்படுவது போல் நல்ல வேலையாட்களை இந்த ஹோட்டல்களில் அமர்த்தியுள்ளார்களே என்ற திருப்தியுடன் மனதில் நினைத்து நான் அவனை நன்றியுடன் நோக்கினேன். அவனும் ஒரு புன்முறுவலுடன் வெளியேறினன்.

" ஸார் மறந்துட்டேன்-சாப்பாடு...... நீங்கள் ஆயத்தமாகிட்டு " கோல் " பண்ணுங்க வந்திடறேன்" என்று திருப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் வைத்து சொல்லிவிட்டுப் போனான்.

ஆப்பிளைக் கண்டதுமே உமிழ்நீர் சுரக்கத் தொடங்கியது. கையினுள் தன்னுடைய ஒருவாறு அழுங்கிக் கிடந்த துவாய்த் துண்டோடும் அழுத்தி வைத்திருந்த ஆப்பிள்களை மேசையில் வைத்து விட்டு என்னைப் பார்த்து 'ஸார் 50 பைசா'

'இப்ப இல்லாட்டால் பிறகு எடுத்துக்கிடலாம்'' நான் ஒரு சுற்று சுற்றி போட்டு வாறேன் என்றான் நமது வழிகாட்டி குண்டன். ''யாருக்கு இந்த ஆப்பிள் பழம்? கேட்டேன்.

'ஏன் சார் பிடிக்காதோ? திருப்பிக் கொடுத்திடலாம். வரும் பொழுது இதுபற்றிக் கேட்டு வந்தீர்களே. உங்க ஊரிலே இது கிடையாது. சாப்பிடட்டுமே என்று கொணர்ந்தேன். ''அவ்வளவுதான்''

''அப்படியா? நீ குறிப்புணர்ந்து செயலாற்றுகின்றாயே. நீ இத் தொழிலில் எவ்வளவு காலம் ... என்று கேட்டு முடிக்கும் முன்

2 தரம் எஸ். எஸ். எல். சி பெயிலாகிட்டேன். ஒரு வருடமாகின்றது. ஏதோ கஷ்டப்பட்டும் தொழில் ஏதும் புரியணுமே ஆகவே ...

ஆள் குண்டனாக இருந்த போதிலும் அவனது போக்கும், பேச்சும் நன்றாகப்பட்டதும், ஒரு சில கேள்விகளை கேட்டு அவனது உள நிலையை சற்றே எடை போட்டேன்'' அவன் எனது சோதனையில் ''பாசாகி'' ட்டான், உடனே எனக்கு அவனையே வழிகாட்டியாக அமர்த்திக் கொள்ள வேண்டும் என்று பட்டது.

''சாப்பாடு ஆகிவிட்டதா'' ஏதோ இந்தியர் போல் தட்டுத் தடுமாறி கதைக்க முனைகின்றேன்.

''என்ன ஸார் சாப்பாடு? ஏதாவது கடித்துவிட்டு வாறன்'' நீங்கள் எங்க போக வேண்டும் என்று திட்டவட்டமாக போட்டு வையுங்க. சாப்பிட்டுடுங்கோ என்றான்.

அவனது முக பாவனையும், சொல்லும் பேச்சும் அவன் நடிக்கவில்லை, மனமாரத்தான் பேசுகின்றான் என்று தெளிவாக அவனை அங்கு நிற்குமாறு பணித்தேன்.

'இங்கேயே சாப்பிடலாமே' என்றேன் ஆமாம் - உங்களுக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம் ஆர்டர் கொடுத்திடுங்கோ''

இதற்கிடையில் அவனை உடை மாற்றி வரும்படி கேட்டேன். அவனும் இதோ குளித்துப் மாற்றலாகி வருகிறேன் சார் என்று அகமகிழ்வுடன் முகம் வெளிக்க நன்றியுடன் சிட்டாய்ப் பறந்தான், இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்த எனக்கு அவனின் உணர்ச்சியின் வேதனை பளிச் சென்று பிரதிபலித்தது நினைவை மாற்றி பெட்டிகளை ஒருவாறு அடுக்கி பிரயாண அலுப்பு நீங்க நல்லதொரு 'தோய்ச்சல்'' போட்டு ஊர் பார்க்க ஆயத்தமாகின்றேன். கதவில் ''டக் டக்'' சத்தம் திரும்பவும் கேட்கின்றது. ஊகித்தபடி திறந்தேன்.

ஆமாம், என்னால் நம்ப முடியவில்லை நம்முடைய வழிகாட்டி நெற்றியில் பளிச்சிடும் திருநீறு அதன் நடுவே சிவந்த பொட்டிட்டு, கழுத்திலும் திருநீறு தீட்டியபடி, வெள்ளைச் சேட்டுடனும், நீலக் காச்சட்டையுடனும், அரையில் கட்டிய சிறு துண்டுடனும் ஆளே மாறியிருந்தான் அவன்.

''ஆயத்தமாங்க? சாப்பாடாச்சா?'' நான் புன்முறுவலுடன் ''இனித்தான்'' ''நீ என்ன குடித்தாய்?'' என்றேன் குறும்பாக.

பின்னர் அவனுக்கு எனது திட்டங்களை யெல்லாம் எடுத்துக் கூறி அடுத்த நாள் இரவினுக்குள் பார்க்க வேண்டியதெல்லாம் பார்த்துவிட வேண்டும். பின்னர் எந்தக் காலம் திருச்சி வருகிறேனோ என்றேன்.

அதெல்லாம் கவலைப்படாதீங்க பஸ்ஸிலேயே போயிடுவமா இல்லே..

''கார்க் கூலி நாளுக்கு என்னவாகும்'' என்று வினவினேன்.

''அவங்க ரொம்ப சார்ஜ் பண்ணுவாங்க ஆட்டோவை அமர்த்திக்கலாமே. ரொம்ப தூரம் சென்றால் உடம்பு வலிக்கும் அவ்வளவு தான்'' என்றான் இதற்கிடையில் அறையை பூட்டுமாறு அவனை வேண்டி இருவரும் பக்கத்தேயுள்ள 'கவிதா' சிற்றூண்டிச் சாலையை அணுறோம். ''கவிதா'' கல்பனாவின் சிற்றுண்டிச்சாலை. கல்பனாவிற்கு இடம் எடுக்கும் பொழுது கவிதாவில் உணவு பெற வசதிகள் செய்துள்ளார்கள் உரிமையாளர்கள்.

''நான் வெளியில் நிற்கின்றேன். நீங்க சாப்பிடுட்டு வாங்க'' என்றான் அவன்.

''ஏன் நீயும் வா? சாப்பாடு தருகிறேன்'' அவன் சந்தோஷமிகுதியில் 'ஆ' வென்று என்னை விழுங்கிவிடுவேன் என்றபடி பார்த்தான். சடாரென்று அவன் முகங் கோணியது.

''ஸார்'' எங்களை விரட்டி விடுவார்கள். பைசா கொடுங்க சாப்பிடுட்டு வந்திடறேன் என்றான்.

'யார் விரட்டுவது?'' என்று கேட்டேன். எங்களைப் போன்ற நபர்களுக்கு சாப்பாடு போடமாட்டாங்க இங்கே' என்றான்.

"அப்படியா ? பார்ப்போம். நீ வந்து அமர்ந்து கொள். தடுத்தால் உனக்குப் பைசா தருகிறேன்" என்று விடையளித்தேன். அவனும் சற்றே பதுங்கியவாறு உள்ளே நுழைந்தான். இதற்கிடையில் அங்கு வந்த "வெயிட்டரிடம்" கதை விட்டேன்; "ஆமாம் சார் ஆனல் நீங்க ஒத்துக்கின்னீங்களென்ருல் நாம சாப்பாடு போடருேம். அவனும் ஒழுங்காக சுத்தமாக வந்திருக்கின்ருன்.

அப்பாடா, நமது மனிதனுக்கு இருந்த மகிழ்ச்சியின் அளவுக்கு எல்லையே காணமுடியவில்லை. நான் அவனுக்கு சற்றே விளக்கமாக அவர்கள் விரட்டுவதற்குரிய காரணத்தை எடுத்து விளக்கினேன். அவனுக்குப் புரிகிறது. இதையறிந்து இவர் என்னுடன் அமர்ந்து சாப்பிடுவதைக் காணச் சிறு ஆரவாரம். இவருக்கோ தலைகால் கொள்ளவில்லை.

அப்பாடா எத்தனை வகையான கறிகள் — எண்ணினேன் எல்லாமாகப் பதினறு கறிவகைகள் தயிர் பாயசம் வேறு .. இது என்ன அது என்ன என்று கேட்கவும் "டக் டக்" கென்று இயந்திரம் போல் பதிலிறுத்தபடியிருந்தான் அவன்.

எனக்கு சற்றே உப்புக் குறைவாகவே காணப்பட்டபொழுதிலும், மிகவும் உருசியான மதியபோசனத்தை அருந்தியபின் கைகழுவலாம் என யோசித்து சற்றுத் திரும்பினேன். பக்கத்தில் ஒரு சோறு விடாது இலையைத் துப்பரவாக்கி விட்டான் நமது நண்பன்.

"ஸார் மிச்சத் தயிரை அப்படியே சீனியைக் கொட்டி உறிஞ்சிடுங்கோ"

"வேண்டாம் நன்ருகச் சாப்பிட்டு விட்டேன். அத்தோடு தயிரைக் குடித்துப் பழக்கமுமில்லை" என்றேன்.

"அப்படியா நான் எடுத்திடட்டுமோ?"

"எடுத்திடு" என்று சிரித்தே விட்டேன். இவற்றையெல்லாம் அங்கு ஓடி ஆடித் திரிந்த அனைவரும் 'வெயிட்டர்கள்' உட்பட இரசித்துக் கொண்டிருந்தனர். ஒரே விளாசு விளாசி விட்டான் நமது நண்பன்.

"சார் ரூம் திறப்பைக் கொடுக்கிறீங்களா" வெயிட்டர்

'ஏன்'

"பில் போடணும் அல்லது பைசா கொடுப்பதனுல் தேவலே" வெயிட்டர்

இதோ திறப்பு - சுருக்காக பில்லைப் போடுங்கள் போக வேண்டும்.

"அப்படியா இந்தாங்க திறப்பு"

[ 62-ம் பக்கம் பார்க்கவும் ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்? பதில்!

ஐ. மனோகரன் தெல்லிப்பழை

★ கே. பருமனான உடற்கட்டுடையவர்களை நோய் விரைவில் அணுகும் என்ற கூற்று உண்மையா?

ப. ஆமாம் பருமனானவர் சாதாரண தேகக்கட்டுடைய ஒருவரிலும் பார்க்க நோய்களுக்கு இலக்காகின்றனர் கள் என மருத்துவ ஆராய்ச்சி கூறுகின்றது. வழக்கமான தேகக்கட்டு உடையவரிலும் பார்க்க அதாவது பருமனானவருக்கு கூடிய இரத்த அழுத்தம் 4 தடவையும் நெஞ்சு நோய் மூன்று தரமும், சலரோகம் 5 தடவையும் வரக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பார்களாம். அத்தோடு பெரிய சத்திர சிகிச்சைகளில் பருமனான தேகக்கட்டுடையவர்கள் உயிர் பிழைக்கும் சந்தர்ப்பம் சாதாரண ஒரு மனிதரிலும் பார்க்க மிகவும் குறைவாகும்.

இளந்திரையன் யாழ்ப்பாணம்

★ கே. 1 சந்திரன் ஏன் இரவில் மட்டும் வருகிறது?

ப. சந்திரன் இரவில் மட்டும் வருவதில்லை. அது பகலிலும் எமக்குத் தெரியக்கூடியதாக வருவதுண்டு. ஆனால் பகலில் தெரியும் சந்திரன் இரவில் தெரியும் சந்திரனைப்போல் பிரகாசமாக இருப்பதில்லை. இதன் காரணம் பகலில் சூரியனின் பிரகாசம் சந்திரனின் பிரகாசத்தைவிட பன்மடங்கு கூடியதாய் இருப்பதாகும்.

★ கே. 2 சந்திரனின் பிரகாசத்தைவிடச் சூரியனின் பிரகாசம் பன்மடங்கு கூடியதாய் இருக்கிறதே ஏன்?

ப. சூரியனின் பிரகாசத்திற்குக் காரணம் அதன் சுயஒளியாகும். ஆனால் சந்திரன் பிரகாசிப்பது இவ்வாறல்ல. சூரியனின் ஒளி பூமியில் படுவது போன்று சந்திரனிலும் படுகிறது. இவ்வாறு சந்திரனிற் படும் ஒளியின் ஒரு பகுதி பூமிக்குத் தெறிப்பதனாலேயே சந்திரன் பிரகாசமாக இருக்கிறது. சூரிய ஒளியின் ஒரு பகுதியை மட்டும் சந்திரன் பூமிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிப்பதனாலேயே சந்திரனின் பிரகாசம் சூரியனின் பிரகாசத்தை விடக் குறைவாய் இருக்கிறது. சந்திரனில் இருந்து பார்த்தால் பூமியும் பிரகாசமாக இருக்கும். சந்திரனில் இருந்து பார்த்தால் பூமி நமக்குத் தெரியும் சந்திரனை விடப் பெரிய சந்திரன் போல் தோன்றும்.

★ கே. 3 சந்திரனின் ஆகாயமும் நீலநிறமாகவா இருக்கும்?

ப: பூமியைச் சுற்றிக் காற்று மண்டலம் இருப்பதுபோல சந்திரனைச் சுற்றிக் காற்று மண்டலம் இருப்பதில்லை. பூமியின் ஆகாயத்திலிருந்து நீலநிற ஒளி பூமிக்குத் தெறிக்கப்படுகிறது என்று கூறினேன். இவ்வாறு ஒளியைத் தெறிப்பதற்குச் சந்திரனைச் சுற்றிக் காற்று மண்டலம் இல்லை. எனவே சந்திரனில் இருந்து பார்த்தால் ஆகாயம் எப்போதும் பயங்கரமான கறுப்பு நிறமுடையதாகக் காணப்படும்.

ஜி. அனிஸ் — கல்முனை

கே. உடலின் எல்லா உறுப்புக்களுமே உயிருள்ளன என்றால் உடலின் ஏனைய உறுப்புக்களை வெட்டும்போது இருக்கும் வலி ஏன் தலைமயிரை வெட்டும்போது மட்டும் இருப்பதில்லை?

ப. உடலின் ஏனைய உறுப்புக்களைப் போல தலைமயிரும் உயிருள்ளதே; அதனால்தான் அது வளர்ச்சியடைகிறது. ஒரு தலைமயிரைப் பிடுங்கிப் பார்த்தால் அதன் அடி நுனியில் தெரியும் வெள்ளை மூடிச்சே மயிரையும் தோலையும் இணைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வெள்ளை முடிச்சிலிருந்தே மயிர் அணுக்கள் (செல்'கள்) வளர்கின்றன. புதிய உயிர் அணுக்கள் வளர வளர பழைய உயிர் அணுக்கள் வெளியேற்றப்பட்டு அவை மயிராக வளர்ந்து கொண்டிருக்கின்றன, அப்பொழுது அதில் கெரடின் (Keratin) என்ற இரசாயனப் பொருளும் கூட இருக்கின்றது. பழைய உயிர் அணுக்கள் மயிராக வளர்ந்து கொண்டிருக்கும் போது கெரடினும் சேர்ந்து கொள்வதால் உயிர் அணுக்கள் செத்து விடுகின்றன. இதனால்தான் தலைமயிரை வெட்டும் பொழுது எவ்வித வலியும் இருப்பதில்லை. நகங்களிலும் இவ்வாறே நடைபெறுகின்றன.

கே. 2 தொட்டால் சுருங்கியின் இலைகளை நாம் கையால் தொட்டவுடன் சுருங்குவதற்குரிய காரணம் என்ன?

ப. நீர் ஒரு விஞ்ஞான மாணவனாயிருந்தால் நாம் தரும் விளக்கம் சுலபமாகப் புரியக் கூடியதாயிருக்கும். தொட்டாச் சுருங்கியின் இலையடிக் காம்பு (Pulvinus) இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, மேல் பகுதியில் உள்ள கலங்கள் தடித்த, உரமான சுவர்களால் ஆனவையாயும் கலங்களிடையே பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகக் காணப்படும் இடைவெளி குறைவாகவும் இருக்கும் ஆனால் கீழ்ப்பகுதியில் உள்ள கலங்கள் மெல்லிய சுவருடையதாகவும் இடையே மிகுந்த இடைவெளிகள் கொண்டுள்ளதாகவும் காணப்படும் சாதாரண வேலைகள் இந்த கலங்களில் நீர் நிறைந்து அவை விறைப்பாக உறுதியாகக் காணப்படும்.

தொட்டாற் சுருங்கியை நாம் தொடும் போது அவ்விலைகளில் ஏற்படும் அதிர்வு இலையடிக் காம்பு (Puluinus) பல்வைனசுக்கு கடத்தப்படுகின்றது. இவ் அதிர்வின் காரணமாகப் பல்வைனசின் கீழ் பகுதியில் காணப்படும் கலங்களில் இருக்கும் நேர் கலத்தைவிட்டு கல இடை வெளிகளுக்குப் பாச்சப் படுகின்றது. உடனே கலத்தின் சுவர் (Cell Wall) தன் விறைப்புத் தன்மையிழந்து சுருங்கியது போல் ஒருங்கி விடுகின்றன. ஆனால் பல்வைனசில் மேற்பகுதியில் காணப்படும் கலங்களிலுள்ள நீர் வெளியேற்றப்படுவதில்லை. ஏனெனில் அவற்றின் சுவற்றின் தடிப்பு அதிகம். கல இடை வெளியும் குறைவு ஆகவே இப்பகுதியில் காணப்படும் விறைப்புக் குறையாது. இவ்விறைப்புக் குறையாத கலங்கள் கீழ்ப்பகுதியில் உள்ள விறைப்பிழந்த கலங்களை அழுத்துகின்றன. அதன் விளைவால் கீழ்ப் பகுதியில் அதிக தோய்வு ஏற்பட்டுகின்றது அதனால் இவ்வாறு நெகிழ்வடைந்த பகுதியால் இலையின் பளுவை தாங்க முடியாது போகவே இலை சோர்வு நிலையை அடைகின்றது.

இங்கு ஆச்சரியப்படுவதற்குரிய ஒரு செயல் என்னவென்றால் இந்நிகழ்ச்சிகள் யாவும் 0 0·5 விநாடியில் நடந்து விடுவது கலங்களில் பாச்சப்பட்ட.

நீர் பழையபடி கலங்களில் மெதுவாக மீண்டும் செல்லுகின்றது. இவ்வாறு நீர் உள்ளே செல்லச் செல்ல தம் விறைப்பு நிலையை சுமார் 10 முதல் 20 நிமிட நேரத்தில் பெறுகின்றது.

கையால் வெட்டால் மட்டுமல்ல காம்புகளின் உராய்வினாலும், வாயுக்களின் மோதல்களினாலும், கடுங்காற்றினாலும் வேறுவித அதிர்வுகள் ஏற்படும் போதும், செடிகளுக்கு மின் அதிர்வூட்டும் போது மேற்படி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இன்னுமொரு ஆச்சரியமான செய்தி என்னவெனின் இச்செடிகளை நாம் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கோ அல்லது வெளிச்சத்திலிருந்து இருட்டிற்கோ எடுத்தும் சென்றாலும் இலைகள் இவ்வாறு சுருங்குவதை அவதானிக்க முடியும். எவ்வித மாறுபாடான அதிர்ச்சிகளுக்கும் ஆளாகும் மென்மையான கலங்கள் இச்செடிகளில் காணப்படுகின்றன. எந்த நிலையிலும் இலைகள் சுருங்குவதற்குரிய காரணம் என்றே இம்மாற்றம் அதிர்வு இயக்கம் (Seismonasty) எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOW TO MAKE A DECISION

DECISION
DECISION
DECISION
DECISION
DECISION
DECISION

*By Gary Bousman*

WHICH one are you going to buy?"
"I can't make up my mind."

This is all I caught of a conversation between two girls in a record shop. But it was enough to remind me of a problem we all face — how to make a decision.

Within the next 24 hours you will have to make some choices. They may be trivial, or they may be decisions that will affect your whole life.

If you can make decisions quickly and without excessive emotional strain, you are lucky. Many people cannot. But the art of making decisions can be learned.

Sometimes you will make poor decisions and sometimes you will make right ones. Your well being will depend partly on your batting average of wise choices, but it will also depend on making decisions, period. Success never rests on indecision



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# youngones

There are no hard and fast rules for making decisions but here are a few pointers.

**Don't waste time over insignificant problems.** If it is a choice between a blue necktie with white stripes or a blue tie with red stripes, weigh the evidence quickly, make a decision, and let it go at that. It probably will not make much difference which one you wear.

**Know your problem.** Analyze it clearly Be sure you understand what is involved. John, for example, cannot decide whether to try out for the school debate team or the senior class play. It is possible that unconsciously he dees not want to try out for either. Perhaps he really wants to run for class president but does not want to face the possibility of defeat. He was therefore trying to solve the wrong problem.

**Get the facts involved.** This does not mean just getting other people's opinions.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Good decisions are based on truths.

If you are planning to study accounting and you are looking for the right college to attend, you will want to know which colleges offer courses in accounting. Then you will want to know which of these colleges rates the highest among those who might employ you later. When you have gathered these facts, you will hardly make the mistake of picking a college that offers only one or two courses in accounting.

Getting the facts may involve a little research and time, but if the problem is important, your time will hardly have been wasted. No matter how much intelligence a person may have, he cannot make wise choices unless he knows the facts pertaining to his problem.

In some cases you may postpone your decision for a time. If you cannot find the answer, and you do not have to make an immediate decision, it may be well to "sleep on" the problem. Perhaps in a day or two the solution will come to you like a flash. This is sometimes called insight.

Actually you have not put the matter completely out of your mind. What is commonly called your subconscious mind takes over the problem, and in a short time the answer often comes into consciousness.

Make your decision and stick to it. When the time comes to make a final decision and you have analyzed the problem, gathered as many facts as



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

possible, and weighed the evidence, then choose the most likely road and stay on it. If you look back over your decisions too often, you may weaken your own convictions and undermine your self-confidence.

When you commit yourself decisively, you may run the risk of making wrong decisions, but you gain poise and self-esteem. Someone has said that a poor decision is better than no decision at all. If you find your decision is wrong you can usually change it to the right decision and go forward, while the person who straddles the fence never finds out which is the right decision and thus seldom gets very far.

*Courtesy: Progress*


## Improve your general knowledge:

### THE SYSTEME INTERNATIONAL OR (SI) UNITS

| Quantity | Unit | Symbol |
|---|---|---|
| Mass (Weight) | Kilogramme | Kg |
| Time | Second | S |
| Length | Metre | M |
| Area | Square Metre | $M^2$ |
| Volume | Cubic Metre | $M^3$ |
| Speed | Metre per Second | M/S |
| Force | Newton | N |
| Work Energy | Joule | J |
| Power | Watt | W |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# MAIL BAG

58. 'Sengkathir' — Much above of what was expected. Well done, Now, we all can raise our head up and boast about Sengkathir. All the success to you.

212/33. Galle Road
Mt. Lavinia — Velavan

59. I have great pleasure in acknowledging receipt of the copies of 'Sengkathir'. The Journals are of good standard and contain valuable material. I hope you will maintain this standard Now a days precious things are not swallowed unless there is a sugar coating. I suggest you graduallev introduce a short story or a serial which will give a bit of attraction. Herewith a cheque covering 2 years subscription.

Chief Accountant
H. M. Customs
Colombo — M. Pasupathy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. Lay out is generally good — செங்கதிர் என்பதனாலென்னவோ எல்லாம் சூரிய மயமாகவே இருக்கின்றது — Perhaps there are no articles to interest the layman - keep it up — No political influence A short story would have been welcome — create standards of your own and make a name for the publication.

Wilmorton
Derby, DE 28 VT,
U. K. — Kaybee

61. I scanned the pages of your monthly. Unfortunately I do not read your language but do appreciate your writing about your stint in the Philippines. Best Wishes.

APO,
Minato - Ku, Tokyo
107, Japan D. A. Cruz

62. We have included your name in our mailing list. Similarly we request you to send your 'Sengkathir - educational monthly' to the under signed.

Kasturba Road — Visvesvaraya
Bangalore - 1 Industrial and
India Technological Museum

விடையிலொரு பிழை

72.844 ×

728.44 √

(பக்கம் 40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த நினைவுகள்

52-ம் பக்கத் தொடர்ச்சி

"நம்பர் நோட் பண்ணிட்டேன்"

நேராக ஹாட்டல் ரிசெப்சன் கவுண்டருக்குச் சென்று அங்கு நம்முடைய வழிகாட்டியைப் பற்றிச் சிறிது விசாரித்து அவனுடன் இடங்கள் பார்த்து வருவதாகக் கூறினேன். அவர்கள் அவனைப்பற்றி யோசிக்கத் தேவையில்லை. ஆள் தெரிந்தவரு, எந்தப் புற்றில் எந்தப் பாம்பு என ஆன்றோர் கூறியிருக்கிறார்களே, ஆகவே இதனை நான் செய்து என் மனதைத் திருப்திப் படுத்திக் கொண்டேன்.

அறையில் சென்று ஒரு ஆப்பிளை எடுத்து நன்றாகக் கழுவிப் பின்னர் வெட்டிச் சுவைத்தபடி எமது "ஊர் சுற்றுதலின்" முதல் படியை ஆரம்பித்தோம்.

எனது முதல் பிரயாணம் திருச்சி – உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு எனத் தீர்மானித்திருந்தேன். இதனை Rock Temple" என்று கூறுவர். ஒரு மலையின் சிகரத்தில் மிகவும் வியக்கத்தக்க முறையில் கட்டப்பட்டுள்ள இக் கோவிலை தரிசிக்க நாடியதற்குக் காரணம் எனது வெளியுலக பிரயாணத்தின் முக்கியகட்டம் தன்னந்தனியே அந்நிய மண்ணில் பல ஆவல்கள் தலை கொள்ள, ஆராய்ச்சிகள் செய்ய வேண்டுமே. நல்லறிவும் இனிய அநுபவங்களும் ஏராளமாகச் சேர வேண்டும். என் பிரயாண முயற்சி சிறக்க வேண்டும். விக்கினங்கள் குறுக்கிடாது வேண்டிய பலன் கிட்ட வேண்டும். அந்நிய மண்ணில் என் குலவிநாயகன் விடைபெற்று செல்ல நான் விழைந்ததில் வியப்பொன்று மில்லையே.

"டுர்ர் ... டுர்ர் ர்ர்ர்"

ஆட்டோ ஒன்று வந்து கல்பனா வாசலில் நிற்கின்றது.

அதனின்று பாய்கிறான் நம் குண்டன்.

"ஸார் ஸார் நாம காரிலே போயிடலாம்"

எல்லாவிடமே காட்டிடுறோம். முப்பது ரூபாய் கொடுத்திடுங்களே பழைய பல்லவி— சுற்றி நின்ற கார்க்காரர்கள் கூப்பாடு போடுகின்றார்கள்.

இவர்களை ஒருவாறு சமாளித்து ஆட்டோவில் ஏறி அமர்ந்து கொள்கின்றோம்.

ஆட்டோ ஒரு உலும்பு உலுப்பி கிழக்கு நோக்கி விரைகின்றது.

ஆமாம் குருசாமி — நமது நண்பன் வழிகாட்டி "சொற்பொழிவைத்" தொடங்குகின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூர். இதுதான் "ஸ்டேட் பஸ் ஸ்ராண்ட்" நேரே போனுல் - திருச்சிஜங்சன் றெயில்ஸ்டேசன்

நானும் அங்குமிங்குமாக தலையாட்டிக் கொண்டிருந்தேன் ஆட்டோவும் சின்ன இடைவெளிக்காலும் புகுந்து, விலத்தி, விலகி நின்று, உறுமி, உலுப்பி, குடுகுடு என 'ஓடிக்கொண்டிருந்தது. அப்பப்பா ஆட்டோ ஓட்டுவதில் தான் என்ன திறன். ஒன்றோடு மோதிவிடுவார்களோ என்று அஞ்சும் வண்ணம் சன நெருக்கம் என்ருலும் சரி, வாகன நெருக்கம் என்ருலும் சரி சர்வ சாதாரணமாக ஓட்டிக் கொண்டிருந்தான்.

"கவனமா ஓட்டடா...... சாருக்கு உடம்பு வலிக்குமே என்று குருசாமி சொல்லவும் எனக்கு இடுப்பு நோவது போலவும், காலில் சூடு பிடிப்பது போலவும் படுகின்றது.



உச்சிப்பிள்ளையார் கோவிலின் ஒரு தோற்றம்

"வியர்வை சிந்துகின்றது" அதோ அந்தக் குன்றுக்குத்தான் போகின்றோம்" என்று சுட்டிக் காட்டுகின்ருன் குருசாமி ஏதோ ஒரு திருப்பத்தில் ஆவலுடன் ஆட்டோ சாளரத்தினூடே பார்த்து இரசிக்கமுன் ஆட்டோ "லபக்" என 120 பாகை கோணத்தில் திரும்பி சடாரென்று 30 யாரையில் இடப்பக்கம்திரும்பி நிற்கின்றது

"ஓய் எங்கய்யா பாத்திட்டு வாருய் ஓரமாப்போ" என்று கத்தினன் ஆட்டோக்காரன். என்ன என்று கேட்டு அறியமுன் ஆட்டோ இன்னும் சில வெட்டுகளுடன் இடம் மாறியது" எனக்கு சிரிப்பதா? அழுவதா? என்று தெரியவில்லை. இதுவும் அநுபவம் தானே சிரித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SUNZONS**

செங்கதிர்ச் செல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஒரே செலவில் தமக்கும் பிறருக்கும்
நயம் வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா ?

நாடு நலம்பெற நாம் நற்சேவை
செய்ய, எமது உற்பத்திப் பொருள்
களை வாங்கி உபயோகியுங்கள்.




## மில்க் வைற் சோப் தொழிற்சாலை

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7233 தந்தி : 'மில்க்வைற்'

கிளை : 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி : 36063


விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம் 1448-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org